குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

25] விசுவாவசு ஆண்டு மார்கழித் திங்கள் 10—1—66 [இதழ் 2

ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ
குருபாதம்

ஸ்ரீகுருஞானசம்பந்தர்

அருள்வாக்கு

தேகாதி நானல்ல
　　என்றறிந்தால் சித்தமயல்
போகாத தென்னையோ
　　புண்ணியா — தேகாதி
தன்னளவே அம்மயக்கம்
　　சத்தியமாய் எப்பொழுதும்
உன்னளவே இல்லை
　　உணர். (36)

ஆசிரியர் :-
வித்துவான்,
சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-
வித்துவான்,
சி. அருணைவடிவேல் முதலியார்.

உ
குருபாதம்

“ஞானசம்பந்தம்”

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 25 ‖ 10-1-66 ‖ இதழ் 2

உட்பொருள்

எண்		பக்கம்
1	பாவையும் கோவையும் ...	1
2	ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் அருளுரை ...	6
3	பல்கலைச்செல்வர் பல்லாண்டு வாழ்க! ...	14
4	வாழி பொங்கல்! ...	16
5	சைவ சமய குரவர் - சந்தானகுரவர் காலம் ...	17
6	அரைக் கண்ணன் ...	22
7	முல்லைப்பாட்டு ...	25
8	கல்லாடம்-திருக் கோவையார் ...	31
9	தர்மமும் தர்மபுர ஆதீனமும் ...	36
10	ஞாயிற்றின் வழிபாடு ...	41
11	வெள்ளிவிழா மலர் வாழ்த்துச் செய்தி ...	45
12	வேலூர் சித்த வைத்தியசாலை ...	49
13	செய்திகள் ...	50
14	எதிர்காலம் ...	54
15	Extract from the Visitors' Book	5, 13, 21, 30, 40.

உ

" ஞானசம்பந்தம் "

இருபத்துநான்காம் ஆண்டு மலர்ப்

பொருளடக்கம்

155265
ஓ23ஈ211,N41
31K6

	பக்க எண்
அணியுடை ஆதிரை நாள்	1
அப்பய்ய தீக்ஷிதரும் சிவபரத்துவமும்	173
அமராபரணன் சீயகங்கன்	236
அருட்பேறு	508, 565, 619, 674
அருளுருவம்	327
அன்னையும் ஐயனும்	285
ஆனியும் ஆனந்தமும்	425
ஆளுநர் அவர்கள் வரவேற்பு	66
இயற்கையன்னை காட்டும் இறைவழிபாடு	531
இராமேஸ்வரத்தில் புயலின் விளைவு	109
இருபத்துமூன்றுவது ஆண்டு மலர்ப் பொருளடக்கம்	134
எதிர்காலம்	70, 130, 190, 253, 318, 365, 417, 483, 540, 596, 649, 705
கடிதம்	99
கயிலாயக் காட்சி	489
குறிஞ்சிக் கடவுள்	157
சரபாஷ்டகம்	525
சஹஸ்ராகமம்	28, 161, 221, 310, 399, 561, 630
சாத்திர தோத்திரம்	369
சித்தாந்த வினுவிடை	35, 169, 225, 271, 337, 385, 445, 503, 557, 666
சித்திரைச் சிறப்பு	259
சிவாகமத்தெளிவு	54, 178, 229, 277, 346
சிறந்த தந்தை சிவபாத இருதயர்	678

25-3-83

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 25] விசுவாவசு - மார்கழி - 10—1—66 [இதழ் 2

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினுய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

பாவையும் கோவையும்

இது மார்கழித் திங்கள் ; மதிப்பிற்குரிய திங்கள். ஏன்? காலையில் எழுந்து, குளிர்ந்த நீரிலே முழுகிக் கடவுளை வணங்கும் சீரிய வழக்கத்தைச் செம்மை யாகக் கடைப் பிடிக்கும் சிறப்புடைய திங்கள்.

நாள்தோறும் முதற்கண் செய்ய வேண்டிய முதல்வன் வழிபாட்டிற்கு இம் மார்கழித்திங்கள் சிறந்து நிற்றற்குக் காரணம் என்னை ? யாவர்க்கும் முதல்வனுகிய நுதல்விழி நாட்டத்து இறையோனும் சிவபெருமானுக்குரிய திருவா

திரைத் திருநாள், இம் மார்கழித் திங்களில் நடத்தப்பெறுவதேயாம். திங்கள்தோறும் திருவாதிரைநாள் வருவதாயினும், அது மதிநிறையும் நன்னாளில் வருவது மார்கழியிலாகும். ஆதலின், மதிநிறைந்த நல்லோர் திருவாதிரைத் திருநாளுக்கு ஏற்றது மார்கழித் திங்களே எனக் கொண்டு நடாத்திவருகின்றனர்.

ஓர் ஊரில் கோயில்கொண்டுள்ள கடவுளுக்குப் பெருவிழா நடத்தப்படுமாயின், அதனை முன்னிட்டு, அவ்வூர் மக்கள் அனைவரும் அவ்விழா நாட்களில் தாங்கள் கடவுள் வழிபாட்டு முறையைச் சிறப்பாகக் கடைப்பிடித்தொழுகுவர். உலகிற்கு ஒருவனும் சிவபெருமானுக்குரிய திருவாதிரைத் திருநாள் உலகம் முழுதும் நடைபெறுவதாகலின், இத்திங்களில் கடவுள் வழிபாட்டுமுறை எங்கும் யாவராலும் சிறப்பாக மேற்கொள்ளப்படுகின்றது. இதனுள்ளும், ஆதிரைநாளை, முடிந்த நீராட்டு விழா நாளாகக் கொண்டுள்ள பத்துநாட்கள் சிறப்பிற் சிறப்பாக விளங்குவன. ஆகவே, ஓர் ஆண்டுக் காலத்தில் வரும் நோன்பு நாட்கள் பலவற்றினும், இப்பத்து நாட்கள் சிறந்த நோன்பு நாட்களாய் அமைந்து, திருவாதிரையில் முற்றுப்பெறும். எனவே, ' இம்மை, மறுமை, வீடு ' என்னும் மூன்று நிலைகளிலும் பெறத்தக்க பயன்களை விரும்புவோர் அவற்றைப் பெறுதற் பொருட்டு இந்நாட்களில் சிறந்த நோன்புடையராகி, இறைவனை வழிபடுதல் மரபாயிற்று.

இம்மை மறுமைப் பயன்கள் இல்லறத்தால் கிடைக்கக் கூடியவை. இல்லறம், ஆடவரும் பெண்டிரும் ஒன்றுபட்டு வாழும் மணவாழ்க்கையால் அமைவது. அவ்வாழ்க்கை ஆடவரினும் பெண்டிர்க்கு நன்கு அமைய வேண்டுவது இன்றியமையாதது. ஏனெனில், முதற்கண் அமைந்த மணவாழ்க்கையைப் பின்புமாற்றிக்கொள்ளுதல் பெண்பாலார்க்கு எவ்வகையிலும் இயலாதது. ஆகவே, மார்கழி நீராட்டு நோன்பு நாட்களில் சிறப்பாக, மணமாகாத இளம் பெண்கள் தங்கள் மணவாழ்க்கை நன்கு அமையவேண்டும் என்று இறைவழிபாட்டினைச் செவ்வனே மேற்கொண்டு செய்வர்.

இவ்வழிபாட்டில் பாவை போலும் இளம் பெண்கள் ஒருவரை ஒருவர் 'பாவாய்' என்று அழைத்துக் காலையில் துயிலெழுப்பிக் கொண்டும் உரையாடிக்கொண்டும் சென்று குளிர்ந்த நீரிலே முழுகி விளையாடி இறைவனை வாழ்த்தி, வணங்கி, வரம்வேண்டி மீள்வர். அப்பாவையர் அதுபொழுது பாடும் பாவைப் பாடல்கள், இம் மார்கழித் திங்களில் எங்கும் கேட்கும். இப்பொழுது பாவை மாநாடுகளும் ஆங்காங்கு நடத்தப்பெறுகின்றன.

பாவைப் பாடல்கள் பலவற்றுள், ஆதிரை நாளுக்குரிய அவன்மீது பாடப்பட்ட பாவைப் பாடல், ஆளுடைய அடிகளாகிய மாணிக்கவாசகர் அருளிச்செய்த திருவெம்பாவையாகும்.

மாணிக்கவாசகர் அருளிச்செய்த திருப்பாடல்கள், 'திருவாசகம், திருக்கோவையார்' என்னும் இருபகுதியவாய் விளங்குதலைப் பலரும் அறிவர். 'திருவாசகப் பாடல்கள் முன்னே பாடப்பட்டன' எனவும், 'பின்பு சிவபெருமான், பாவை பாடிய வாயால் கோவை பாடுக எனக் கேட்க, அதன் பின்னர், திருக்கோவையார் பாடப்பட்டது' எனவும், திருவெம்பாவையை ஒருவாறு திருக்கோவையாரோடு தொடர்பு படுத்திக் கூறும் செவிவழிச் செய்தியொன்று சொல்லப்பட்டு வருகின்றது. இதனால், மார்கழித்திங்களில் திருவாதிரையை முன்னிட்ட பத்து நாட்களில் சிறப்பாக ஓதப்பட்டுவரும் திருவெம்பாவைக்கும், திருக்கோவையாருக்குமிடையே ஓர் ஒற்றுமை உள்ளது என்பது புலனாகும். அவ்வொற்றுமை யாது ?

திருக்கோவையாருக்கு உரைவகுத்த பேராசிரியர், 'அஃது, அறிவன்நூற்பொருளும், உலகநூல் வழக்கும் என இருபொருளும் நுதலி எடுத்துக்கொள்ளப்பட்டது' என்கின்றார். அதற்கேற்ப, அவ்விருபொருளும் திருக்கோவையாரில் விளங்குவதைக் காண்கின்றோம். அறிவன்நூற் பொருள், ஞானம் ; உலகியல் வழக்கு, அகப்பொருள் துறைகள் "நாடவர் நந்தமை ஆர்ப்ப ஆர்ப்ப - நாமும் அவர்தமை

ஆர்ப்ப ஆர்ப்ப" என்று உலகியலை முற்றும் வெறுத்து, அறிவாற் சிவனேயாய், உடம்பையும் விரைவில் விட்டு நீங்க வேண்டி, இறைவனைப் பலவாற்றானும் பாடிப் பரவிய ஆளுடைய அடிகள், உலகநூல் ஒழுக்கமாகிய அகப் பொருள் அமைந்த திருக்கோவையாரைப் பாடியது ஏன் என்று எவரேனும் ஐயுறுவராயின், அதனைப் போக்கவே, திருவாசகத்தில் உள்ள திருவெம்பாவையைத் திருக்கோவை யாரோடு இணைத்து ஆன்றோர் காட்டினர்போலும்! அஃதா வது, திருவாசகத்தில் உலகியல் பற்றியும் அருளிச்செய்த பகுதி உண்டு; அது திருவெம்பாவை என்பதைக் குறிப்பால் விளக்கினர்போலும்!

'நாடு செழிக்க நன்கு மழைபொழிதல் வேண்டும்; இளம் பெண்டிர்க்கு இறையன்பு பொருந்திய கணவர் வாய்த் தல் வேண்டும்' என்றாற்போல்வன, திருவெம்பாவையிலே காணப்படும் உலகியல்கள். சிறப்புப் பற்றிப் பெண்டிர்க்குக் கூறியது, ஆடவர்க்கும் பொருந்தும். அவர்கட்கும் இறை யன்பு குறையாத மனைவியர் வாய்க்கவே வேண்டும்; மற்றும் பல நலங்களும் இருபாலர்க்கும் ஓங்குதல் வேண்டும் என்றும் அடிகள் திருவெம்பாவையில் அருளினாராவர்.

இறைவன் திருவடிப் பேற்றையன்றி வேறொன்றையும் விரும்பாதிருந்த அடிகள், உலகிற்கு ஒருநாளாகிய ஆதிரை விழாவை முன்னிட்ட சிறப்பு நாட்களில் அனைவரும் ஓதி எல்லா நலங்களையும் எய்துமாறு பாவைப்பாடலை,

" ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதி "

என்று தொடங்கி, இடையில் இறைவனது பெருநிலைகள் பல வற்றையும் பொதிந்துவைத்து, இறுதியில்,

" மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய் "

என்று முடித்து அருளிச்செய்தது, உலகினர்மீது வைத்த பெருங்கருணைச் செயலேயாம். ஆதலின், அவரது அருமைத் திருவிழாவும், ஆதிரைத் திருநாளுடன் இணைத்து எங்கும் செய்யப்பெறுகின்றது. அதனை யறிந்து, அத் திருவெம்பா வையை ஓதுகின்ற நாம், ஏனைய திருவாசகப் பகுதிகளையே

யன்றித் திருக்கோவையாரையும் ஏனைய திருமுறைகளையும் ஓதிப் பயன் பெறுதற்கு உரிய தொடக்க விழாவாகவும் இப் பாவைத் திருநாட்கள் அமைதல் வேண்டும். அதற்கு வாய்ப் பாகவே, திருத்தருமையாதீனத்திற்குச் சொந்தமான தேவஸ் தானங்களில் பாவை விழாக்கள் சிறந்த வகையில் நடத்தப் பெற்று வருகின்றன. அவற்றின் பயனாக, இனிவரும் நாட் களில், பாவையோடு கோவையையும், பிற திருமுறைகளை யும் ஓதி, எந்நலமும் இனிது எய்துவோமாக.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthagatesvaraswami Devasthanam, Tirucadaiyur.

I was fortunate to have the opportunity to pay a visit to Amirthagateswarar temple today. Apart from neatness and cleanliness all around, what helped me most in getting the devotional frame of mind was the atmosphere of peace and quiet. The staff were kind enough to explain the various incidents which are the part of the great history of this great temple.

The administrative side, leaves nothing to be desired.

(Sd.) S. C. SEN GUPTA,

29—12—65. Joint. Secy., Govt. of India.

இன்று திருக்கடவூர், திரு. V. C. V. *குடும்பத்தார்கள் இங் குள்ள எல்லா சன்னிதானங்களிலும் மனமுருகி சன்னிதானத்தின் சரியான சமய முகவு வழிபாட்டு முறைகளைக் கண்டு சந்துஷ்டி எய்தி சாந்தி அடைந்ததற்கு சன்னிதானத்துக்கு தாங்கள் அன்பைத் தெரிவிக்கிறார்கள்.*

(Sd.) V. K. Venkatesan
(Sd.) V. Kalisamy Kavundar
(Sd.) V. K. Anandan
(Sd.) V. K. ThiruArulprakas
(Sd.) V. K. Selvakumar.

(V. C. V. Estate, Vellayangiri, Coimbatore)
29—12—65.

உ

குருபாதம்

திருத்தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்கியருளிய

அருளுரை

பேசா அநுபூதி

எக்காலம் மெய்க்கே இரையிடுதல் இற்றிடுமோ
எக்காலம் இக்கரணம் இற்றிடுமோ—எக்காலம்
பேசாநு பூதி பிறந்திடுமோ என்உளத்தில்
ஆசானே சொக்கநா தா.

— *குருஞானசம்பந்தர்*

'புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி, மற்றும் எல்லாப் பிறப்புமாய்ப் பிறப்பதிலும், மக்களாய்ப் பிறக்கும் பிறப்பே சிறந்தது எனப் போற்றப்படுதற்குக் காரணம், நன்மையும் தீமையும் பகுத்துணரும் உணர்வு, மக்கட் பிறப்பில் அமைந்திருப்பதேயாகும். ஆயினும், மக்களாய்ப் பிறந்தும் அவற்றைப் பகுத்துணராது இருப்பார்களாயின், அவர்களை என்னவென்று சொல்வது!

" தக்க இன்ன தகாதன இன்னஎன்று
ஒக்க உன்னல ராயின் உயர்ந்துள்
மக்களும் விலங்கே "

என்றார் கம்பநாடர்.

'இன்பம்! இன்பம்!' என்று எல்லா உயிர்களும் இன்பத்தைத்தான் நாடுகின்றன. ஆனால், அவைகள் இன்பத்தை அடைகின்றனவா? இல்லை. ஏன்? விரும்புவது, இன்பத்தை; பற்றுவது, துன்பத்துக்குக் காரணமானவற்றை.

மக்களும் அப்படித்தான் இருக்கின்றனர்; அஃதாவது, 'எது துன்பம்? எது இன்பம்?' என்று பகுத்துணர்ந்து, துன்பத்தினின்றும் நீங்கி, இன்பத்தைப் பெறும் வழியில் செல்லாது, 'கண்டதே காட்சி; கொண்டதே கோலம்' என்று நடப்பதிலேயே காலத்தைக் கழிக்கின்றனர். இது பொதுவாக மக்கள் இனம் முழுவதிலும் காணப்படுவது. அதனால், இத்தன்மை உடையவர்கள், 'பொது மக்கள்' எனப்படுகின்றனர்.

இனி, நன்மையும் தீமையும் பகுத்துணர்ந்து, நன்மையைப் பற்றியும், தீமையை நீக்கியும் ஒழுகும் நல்லறிவுடையோர் சிலரே. அவர்கள், 'நன்மக்கள்' எனப் போற்றப்படுவர். பொதுவாக, 'நன்மை' எனப்படுவது அறமும், 'தீமை' எனப்படுவது பாவமும் ஆகும். அதனால், நன்மக்கள், பாவத்தை வெறுத்தொதுக்கி, அறத்தை விரும்பிக் கடைப்பிடித்தொழுகுவர். ஆயினும் உண்மையில் நன்மையாவது, இறைவன் திருவருளும், தீமையாவது, 'நான்' என்னும் தன்முனைப்பு அல்லது சிவபோதமும் ஆகும். ஏனெனில், 'நான்' என்னும் முனைப்பினாற் செய்யப்படுவன எல்லாம், பிறவிக்குக் காரணமாயே நிற்கும். பிறவியே எல்லாத் துன்பங்கட்கும் முதலாவது. அதனால், பிறவி யற்ற நிலையே இன்பம். பிறவியைப் போக்குவது, இறைவன் திருவருள் ஒன்றே. ஆதலின், திருவருள்வழி நின்று, தன்முனைப்பு அற்றவர்கள், 'பெருமக்கள்' எனப் பெரிதும் உயர்த்துச் சொல்லப்படுகின்றனர். தன்முனைப்பு அற்று, அஃதாவது, தன்செயல் என்பது இன்றி, எல்லாம் திருவருட் செயலாக உணர்ந்து, அத்திருவருளில் அடங்கிநிற்கும் நிலையே, 'பேசா நிலை - மௌன நிலை' எனப்படுவது. இதைத்தான், 'சும்மா இருத்தல்' என்றும் சொல்கின்றனர். அருணகிரி நாதர், தமக்கு இறைவன், 'சும்மா இரு' என்ற சொல்லையே உபதேசித்ததாகக் கூறுகின்றார்.

"சும்மா இரு சொல்லற என்றலுமே
அம்மா பொருள்ஒன்றும் அறிந்திலனே"

என்ற கந்தரநுபூதியைக் காண்க. திருவருளில் அடங்கிச் சும்மா இருத்தலை, 'அடக்கம் உடைமை' என்ற அதிகாரத்தில், திருவள்ளுவர்,

"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து"

என்று ஒருவாறு குறிப்பாகக் கூறினர். அதை உமாபதி சிவாசாரியர், தமது திருவருட் பயனில், '**அணைந்தோர் தன்மை**' என்ற அதிகாரத்தில்,

" புலன்அடக்கித் தம்முதற்கண் புக்குறுவார்; போதார்;
தலன்நடக்கும் ஆமை தக "

என்று வெளிப்படையாக அருளிச்செய்தார். தற்போதம் அடங்கித் திருவருளில் நிற்கும் நிலையை, திருவுந்தியார், '**கூட்டில் வாள் சார்த்துதல்**' என்று கூறுகின்றது.

" வீட்டில் இருக்கில்என் நாட்டிலே போகில்என்
கூட்டில்வாள் சார்த்திநின் றுந்தீபற "

என்பது அப்பகுதி. தன்முனைப்பாகிய ஆன்மபோதம், வாள் போன்றது. அதனால் விளைவது கொடுஞ்செயல். அதனைத் திருவருளாகிய உறைக்குள் புகுத்திவிடல் வேண்டும். அங்ஙனம் புகுத்திவிட்டால் தீங்கு ஒன்றும் இல்லை.

பதற்றத்தால் கொடுந்தொழில்கள் செய்பவனை நல்லோர்கள் கண்டு, '**சும்மா இரு**' என்று அறிவுரை கூறுவர். அங்ஙனமே தற்போதத்தை முன்னிட்டு அலைகின்ற நம்மை, இறைவன் குருவாக வந்து, '**சும்மா இரு**' என்று சொல்கின்றான். அதன்படி சும்மா இருந்துவிட்டால் நமக்குத் தீமை இல்லை.

" சாட்டையிற் பம்பர சாலம் போல்எலாம்
ஆட்டுவான் இறைஎன அறிந்து நெஞ்சமே
தேட்டம்ஒன் றறஅருட் செயலில் நிற்றியேல்
வீட்டறம் துறவறம் இரண்டும் மேன்மையே "

என்கின்றார் தாயுமானவர். எனவே, இங்ஙனம் 'எல்லாம் அவன் செயல்; அவனன்றி ஓர் அணுவும் அசையாது' என்று உணர்ந்து, நம் செயலற்று இருப்பதே, 'சும்மா இருத்தல், மௌன நிலை' என்றெல்லாம் சொல்லப்படுவது என்பது தெளிவு. இந்நிலைக்கு மேற்பட்ட ஞானநிலை வேறொன்றும் இல்லாமையால்,

" மோனம் என்பது ஞான வரம்பு "

என்றார் ஔவையார்.

'எவையேனும் செயல் செய்வது என்றால் கடினம்; சும்மா இருத்தல் என்பது எளிதுதானே; இஃதென்ன அருமை' என்று சிலர் கருதலாம். இதுதான் இயலாத காரியம். இதைத் தாயுமானவர்,

"கந்துக மதக்கரியை வசமாய் நடத்தலாம்
கரடிவெம் புலிவாயையும் — கட்டலாம்"

என்பது முதலாக அழகுபடக் கூறிச் சென்று, முடிவில்,

"சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற
திறம் அரிது"

என்று கூறினர். திருக்களிற்றுப்படியார் என்னும் அழகியநூல், பின்வருமாறு கூறுகின்றது.

செய்தற் கரிய செயல்பலவும் செய்துபலர்
எய்தற் கரியதனை எய்தினர்கள் — ஐயோநாம்
செய்யாமை செய்து செயலறுக்க லாயிருக்கச்
செய்யாமை செய்யாத வாறு.

'வாளால் மகவரிந்து ஊட்டல், மாது சொன்ன சூளால் இளமை துறத்தல் முதலிய செய்யமுடியாத பல செயல்களைச் செய்து, பெரியோர் பலர், அடைதற்கரிய பேற்றை அடைந்தார்கள்; ஆனால், ஒருசெயலும் செய்யாமல் நாம் சும்மா இருந்தால் போதும்; அந்தப் பேற்றை அடைந்துவிடலாம் என்று சாத்திரங்கள் சொல்ல, அவ்வாறு இருக்கமுடியாமை வருந்தத்தக்கது' என்பது இப்பாடலின் பொருள். இதனால், ஆன்ம போதத்தை அடக்கித் திருவருளின்வழி நிற்றல் எவ்வளவு அரிய செயல் என்பது புலனாகும்.

சும்மா இருத்தலாகிய இந்த மௌன நிலையே, 'பேசா நிலை, பேச்சற்ற இடம்' என்றெல்லாம் சொல்லப்படுவது. 'அநுபூதி நிலை' என்பதே இதன் பொருள். அதனால், அந்த நிலையை, 'பேசா அநுபூதி' என்றும் சொல்வார்கள். 'பேசா அநுபூதி' என்பது, இரண்டு பொருளிற் சொல்லப்படுவது; ஒன்று. அநுபூதிநிலை அநுபவிக்க வருமே யன்றிப் பிறருக்கு, 'இவ்வாறு இருக்கின்றது' என எடுத்துச் சொல்லவாராது. இதனை,

“ இங்ஙன் இருந்ததென் றெவ்வண்ணம் சொல்லுகேன்
அங்ஙன் இருந்ததென் றுந்தீபற ”

என்ற திருவுந்தியாரில் காணலாம். இனிப் பேச்சு உண்டாகுமாயின், அங்கு அநுபவம் இல்லாதுபோகும். அஃதாவது, ஆன்ம போதம் தலையெடுக்குமாயின், சிவாநுபவம் மறைந்துவிடும். ‘கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர்’ என்பது இது பற்றியே. அதனால் பேசாதிருத்தலே அநுபூதிக்கு வழியாகும். ஆகவே, ‘பேசா அநுபூதி’ என்பது, ‘பேசப்படாத அநுபூதி’ என்றும், ‘பேசாமையால் வரும் அநுபூதி’ என்றும் பொருள் தருவதாம்.

ஆன்ம போதத்தை அடக்கிப் பேசாதிருக்கத் தலைப்படுவோமாயின், இறைவன் அந்நிலைக்குத் துணைபுரிந்து தனது இன்ப அநுபவத்தை அளித்தருளுவான்.

“ பேசாமை பெற்றுஅதனிற் பேசாமை கண்டனரைப்
பேசாமை செய்யும் பெரும்பெருமான் — பேசாதே
எண்ணென்றும் வண்ணம் இருக்கின்ற யோகிகள்பால்
உண்ணின்றும் போகான் உளன் ”

என்பது திருக்களிற்றுப்படியார்.

பேசாமற் சும்மா இருக்கவிடாது, எதையேனும் செய்து கொண்டேயிருக்கத் தூண்டுவது எது? செம்பிற்குக் களிம்பு போல ஆன்மாவிற்கு அநாதியே அமைந்த குற்றமாகிய ஆணவ மலமே. கன்மமும், மாயையும் அதற்குத் துணைசெய்கின்றன. எனவே, சும்மா இருக்கவேண்டும் என்று விரும்புபவர்களையும், இம் மும்மலங்கள் சும்மா விடுவதில்லை. அதனால், அவர்கள் இம் மும்மலங்களோடு போராடுகின்றார்கள். அஃதாவது, திருவருளையே நினைத்து, இவைகளின் வலிமையை அடக்க முயல்கின்றார்கள்.

“ தேகாதி யாகும்ப்ர பஞ்சஇரு ளாகியே
திண்டாடும் மும்மலப்பேய்
போராடு தென்னுடன்; நான்ஏழை; அதனுடன்
போராட முடிவதில்லை ”

என்று எங்கள் பத்தாவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், தங்கள் தக்ஷிணா மூர்த்தி அருட்பாவில் அருளுகிறார்கள்.

இவ்வாறு மும்மலங்களுடன் போராடுகின்றவர்கள் யார்? இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட அடியார்களே. அவர்கள் இப்போராட்டத்தில், 'சும்மா இருக்கும் நிலை என்று வருமோ' என்று ஏங்குகின்றனர்; அதுபற்றி இறைவனிடம் முறையீடும் செய்கின்றனர். அவ்வகையில் எங்கள் ஆதி பரமாசாரியர் அருளிச் செய்த ஒரு வெண்பாவே, முதலிற் கொடுக்கப்பட்டது.

எங்கள் ஆதி பரமாசாரிய மூர்த்திகள், '**தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த**' என்றபடி, இறைவன் குருவாய் இருந்து அருள்புரியப்பெற்றவர்கள். அதனால் அவனை, '**ஆசானே**' என்று அழைக்கின்றார்கள். இதற்கு முன்பே ஒரு வெண்பாவில் அவர்கள், 'ஆற்றையணிவேணியனே! நீற்றைப் புனையும் நிமலனே! கூற்றைக் குமைத்தவனே!' என்றெல்லாம் சொல்லி, 'உன் கோகனகத் தாளை என் சிரத்து அமைத்தவனே' என்று உரிமையுடன் அழைத்துள்ளார்கள்.

'பேசா அநுபூதிக்குத் தடையாகப் பேச்சு உண்டாவது, காலவசமோ! கடியேன் வினைவசமோ! ஞால வசமோ!' என்று கேட்கின்றார்கள். 'நீண்டநாள் பிறந்து இறந்து துயர்ப் பட்டேன்; இனியும் நாட்கள் அவ்வாறு கழியாதபடி அருள் செய்யவேண்டும்' என்று தமது வேட்கையை அவர்கள் இறைவனிடம் வெளிப்படுத்துதலைக் காணலாம்.

'கால வசமோ! வினை வசமோ! ஞால வசமோ!' என்றதை, 'ஆறாறு தத்துவத்தும், ஆணவத்தும் சாராமல், உனது திருவடி நிழலையே சார்ந்திருப்பவரே சதுரர்' என்று வேறொரு வகையில் விளக்கினார்கள். "**அறியாமை அறிவகற்றி**" என்ற சிவஞான சித்தியின் பொருளே இதில் அமைந்திருத்தல் காணலாம்.

அருணகிரிநாதர், 'எது மெய்ப்பொருள்?' என்று ஆராய்வதுபோல எடுத்துக்கொண்டு, 'வானோ? புனலோ? பாரோ? கனலோ? மாருதமோ?' என்று பலவாறாகக் கூறிச் சென்று, முடிவில், 'எனை ஆண்ட இடந்தானே' என்று, அதுவே, மெய்ப்

பொருள் என்பதனை உணர வைத்தார். அதுபோலவே எங்கள் பரமாசாரிய மூர்த்திகளும், 'எது வீடுபேற்றுக்கு வழி' என்று ஆராய்வதுபோல எடுத்துக்கொண்டு, 'காடோ? வனமோ? மலையோ? பூமியோ? வளமுள்ள நாடோ? கலைஞானமோ? உடலை வருத்திச் செய்யும் தவமோ?' என்றெல்லாம் சொல்லிச் சென்று, முடிவில், 'போதம் அடங்குவதோ' என்று கூறி, அதுவே வழி என்பதை உணர வைத்துள்ளார்கள். (காடு, சிறியது. வனம், பெரியது.) எனவே, ஆன்ம போதம் அற்ற பேசாநிலையே வீடுபேற்றிற்கு வழி என்று அவர்கள் வலியுறுத்துவதைக் காண்கின்றோம். ஆகவே, இதற்குத் தடையாய் உள்ளவைகள் என்று நீங்கும் என்று அவர்கள் ஏக்கம் உறுகின்றார்கள்.

எக்காலம் இக்காயம் இற்றிடுமோ ! என்வினைகள்
எக்காலம் மும்மலங்கள் இற்றிடுமோ — எக்காலம்
ஆனந்த சாகரத்தில் ஆடிடுமோ என்உளந்தான் !
ஆனந்தா சொக்கநா தா

என்ற பாடலாய் வெளிப்போந்தது அவர்கள் அவா. காயம் - மாயை. வினை - கன்மம். இவை எல்லாவற்றிற்கும் மூலமாய் இருப்பது ஆணவம். இதன் தூண்டுதலால், அகவுடம்பாகிய மனம் முதலிய அந்தக் கரணங்களும், புறவுடம்பாகிய ஞானேந்திரிய கன்மேந்திரியங்களும் உலகியலில் பலவகையில் செயற்படுகின்றன. அச்செயற்பாடுகளை எல்லாம் நன்றாகச் சிந்தித்துப் பார்த்தால், அவையாவும், உடம்பைக் காப்பனவாகவே முடியும்.

'' யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும்
உறங்குவது மாகமுடியும் ''

என்றார் தாயுமானவர். இதனால், எங்கள் பரமாசாரிய மூர்த்திகள். "எக்காலம் மெய்க்கே இரைஇடுதல் இற்றிடுமோ" என்கிறார்கள். 'இரை இடுதல்' என்பது, 'இரை இடவேண்டும்' என்னும் எண்ணம். அந்த எண்ணம் நீங்கினால், இந்தக் கருவி கரணங்கள் செயலின்றி ஒழியும். அதுபற்றி, 'எக்காலம் இக்கரணம் இற்றிடுமோ' என்று அடுத்துக் கூறினார்கள். இந்த இரண்டும் நீங்கினால், ஆன்மபோதம் தலை எடுக்க வழியில்லை. பேசா அநுபூதி பிறந்துவிடும். ஆகவே, "எக்காலம் பேசாநுபூதி பிறந்திடுமோ" என்று அருளிச்செய்தார்கள். இதற்குத் தமக்குக் குருவாய் நின்று அருள்செய்த தம் ஆன்மார்த்த மூர்த்தி

யாகிய சொக்கலிங்கப் பெருமானைத் தவிரத் துணையாவார் பிறர் இல்லை என்னும் கருத்தினால், " **ஆசானே சொக்கநாதா** " என்று அழைத்து, அவனிடம் தங்கள் வேண்டுகோளைச் சமர்ப்பிக்கிறார்கள். அருணகிரி நாதரும்,

" நேசா முருகா நினது அன்பருளால்
ஆசா நிகளம் துகளா யினபின்
பேசா அநுபூதி பிறந்ததுவே "

என்று அருளிச் செய்தார். இந்தப் பேசா அநுபூதி அடைய முயலாதவர்கள், மெய்க்கு (உடம்பிற்கு) இரையிடுகின்றவர்களே யன்றி, மெய்ப்பொருளாகிய இறையை அடைகின்றவர் அல்லர் என்பதும், எங்கள் குருமூர்த்திகள் வாக்கில் அமைந்து கிடத்தல் அறியத்தக்கது. திருநாவுக்கரசரும்,

" பூக்கைக் கொண்டுஅரன் பொன்னடி போற்றிலார்
நாக்கைக் கொண்டுஅரன் நாமம் நவில்கிலார்
ஆக்கைக் கேஇரை தேடி அலமந்து
காக்கைக் கேஇரை யாகிக் கழிவரே "

என்று அருளினார். ஆதலின், அவ்வாறு மெய்க்கு இரை இடுதலிலேயே நாட்களைக் கழிக்காது, எங்கள் பரமாசாரிய மூர்த்திகளது அருள்வாக்கை ஓதி, மெய்ப்பொருளாகிய இறையருள் வழி நின்று, பேசா அநு பூதியைப் பெற்று உலகம் உய்வதாக.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthagatesvaraswamy Devasthanam, Tirucadaiyur.

I had the good fortune to stay here for two days and have Mirthanjaya Homam done for me. I found the temple maintained in excellent condition and the temple services were performed in an exceedingly nice manner. The General apperence of the temple and the way in which it is maintained and managed speaks volumes for the Dharmapuram Adinam which has a special reputation for maintaining the shrines under its management in a manner which leaves no room for criticism.

(Sd.) K. Raja Ayyar,

13—11—65. Ex. Advocate General, Madras.

பல்கலைச்செல்வர் பல்லாண்டு வாழ்க!

தமிழகத்தில் வடமொழி, தென்மொழி இருமொழிப் புலவர் பலர் இருந்திருக்கின்றனர். அவற்றுடன் ஆங்கிலமும் அறிந்த மும்மொழிப் புலவர் பலர் இன்று உளர். ஆயினும் பன்மொழிப் புலவராய் விளங்குபவர் உயர்திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் M. A., B. L., M. O. L., இவர்கள், ஆங்கிலமும், சட்டக் கல்வியும் பெற்று வழக்கறிஞராய் வாழத் துவங்கியும், தமிழ்ப் பற்றும், சமயப் பற்றும் இவர்களைக் கல்வித்துறையிலே செலுத்திவிட்டன. அதன் பின்பு தமது அளவிலா ஆர்வத்தா லும், அயரா உழைப்பினாலும் பலமொழி பயின்று, அவை அனைத் திலும் புலமை பெற்றுப் பன்மொழிப் புலவரானார்கள்.

பன்மொழிப் புலவராகிய உயர்திரு. தெ. பொ. மீ. அவர்களுக்கு 'பல்கலைச் செல்வர்' என்னும் பட்டம், திருத்தருமையாதீனத்தில். செந்தமிழ்ச் சொக்கன் திருமுன்பில், 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களால் வழங்கப்பெற்றது. குருவருளின் சிறப்பும், திருவரு ளின் ஆற்றலும் அவர்களை இப்பொழுது பல்கலைக் கழகச் செல்வ ராக ஆக்கியிருக்கின்றது.

இவ்வாதீனத்தில் இத்தகைய பட்டம் பெற்றவர்கள், அதன் பின்பு மேலும் சிறந்த நிலையை அடைந்திருத்தல் கண்கூடு. அங்ஙனம் பன்மொழிப் புலவர் உயர்திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் M. A., B. L., M. O. L., இதுபொழுது மதுரைப் பல்கலைக் கழகத்தின் முதல் துணைவேந்தராய்ச் சிறப்புப் பெற்றிருக் கின்றார்கள். பல்கலை முதல்வன், மதுரை மீனாட்சிசுந்தரேசன்; பன்மொழிப்புலவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, மீனாட்சிசுந்தரேசன், மதுரை முதற்சங்கப் புலவன், மீனாட்சிசுந்தரம் பிள்ளை, மதுரைப் பல்கலைக் கழக முதல் துணைவேந்தர். எத்துணைப் பொருத்தம்! இப்பொருத்தத்தினை எவ்வளவு பாராட்டினும் தகும்.

திருத்தருமையாதீனம், தருமையும் கமலையும் விரிதமிழ்க் கூடலும் திருநகராகக் கொண்ட ஒரு ஞானப்பேரரசு.

இது சிவநெறியோடு செந்தமிழையும் வளர்த்துவருவது. இதன்கண் எழுந்தருளியிருந்து அருளாட்சி நடத்தும் குருமகா சந்நிதானங்கள் தங்கள் ஆன்மார்த்த மூர்த்தியாகிய சொக்க லிங்கப் பெருமானை, "செந்தமிழ்ச் சொக்கன்" என்றே குறிப்பது வழக்கம். இத்தருமைச் சொக்கன் திருமுன்பில் பல்கலைச் செல்வர் ஆன உயர்திரு. தெ. பொ. மீ. அவர்கள், விரிதமிழ்க்கூடல் சொக்கன் திருமுன் பல்கலைக் கழகத் துணை வேந்தர் ஆகியுள் ளார்கள் என்பது நினைந்து நினைந்து மகிழத்தக்கது. மதுரைப் பல்கலைக் கழகம் இவர்களது தலைமையில் பழந்தமிழ்ச் சங்கங் களைப்போன்று தமிழ் வளர்ச்சிக்கும் சமய வளர்ச்சிக்கும் உறு துணையாய் விளங்கும் என்பது உறுதி.

உயர்திரு. தெ. பொ. மீ. அவர்களது அறுபத்தைந்தாவது பிறந்த நாள் விழா, தமிழகத்தில் பல துறைகளிலும் சிறந்து விளங்கும் பெருமக்கள் பலரும் ஒன்றுகூடியிருந்து பாராட்ட, **7—1—66** இல் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அறுபத்தைந்தா வது பிறந்த நாள் விழாவை ஏற்ற நம் பல்கலைச் செல்வர், பன்மொழிப் புலவர், உயர்திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள், நாடு வாழ, நற்றமிழ் வாழ, சைவம் தழைக்க, இன்னும் பல பிறந்தநாள் விழாக்களை ஏற்றுப் பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகின்றோம்.

வாழ்க பன்மொழிப் புலவர்!

வாழ்க பல்கலைச் செல்வர்!



வாழி பொங்கல்!

திருநெறிச்செம்மல்,

வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர்

திருநெறிச் சைவம் வாழத்
தெய்வமாத் தமிழ் விளங்கப்
பெருநெறி யாகும் சைவம்
பேணிடும் அடியர் வாழ
அருநெறி பிடித்து ஞாலம்
அருந்துயர் நீங்கி யோங்க
ஒருநெறிப் பொங்கல் பொங்கி
உலவுக உலக மெல்லாம்!

இந்திய நாட்டினுக் கோர்
இணையிலா ஆன்ம ஞானம்
சிந்தனைத் தெளிவி னோடு
சிறந்திட, வையம் வாழ
வந்ததிப் பொங்கல் நன்னாள்!
வண்மை யோடுண்மை யாவும்
முந்திட வாழ்க வென்று
மொழிகுவம்; வாழி பொங்கல்!

உணவினிற் குறைவி லாமல்
உணர்வினிற் பிழைபா டின்றிக்
குணமுயர்ந் துலக மாந்தர்
குறைவறப் போரின் இன்னல்
தணலினின் நீறுய்க் கெட்டு
தண்மையே செழிக்க, இந்நாள்
மணத்துடன் வந்த பொங்கல்
மலிபுகழ் வாழி, வாழி!

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான
திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்திற்கு



அகில இந்திய காங்கிரஸ் மகாசபைத் தலைவர் கனம். திரு. K. காமராஜ் அவர்களும், அமைச்சர்களும் வருகை புரிந்த போது அளித்த வரவேற்பு



பாதுகாப்பு நிதிக்குத் தங்கம் வழங்குதல்

மாயூரம் குமரக்கட்டளை
ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானம் கந்தசஷ்டி விழாவின்போது
நிகழ்ந்த



திருவிளக்கு வழிபாடு

சைவ சமய குரவர் சந்தான குரவர் காலம்

திரு. K. M. வேங்கடராமையா, M.A., B.O.L.

சைவ சமய குரவர்:

சைவ சமய குரவர் ஆவார் 'வித்தகப் பாடல் முத்திறத்து அடியார்' ஆகிய திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும், சுந்தரரும் திருந்திய அன்பிற் பெருந்துறைப் பிள்ளையாகிய மாணிக்கவாசகரும் ஆவார். இவர்களுடைய காலம் சுருக்கமாக ஆய்ந்து கூறுவேன்.

சம்பந்தர் காலம்:

சம்பந்தர், திருச்செங்காட்டங்குடித் திருப்பதிகத்தில் சிறுத்தொண்டர் பணியைப் புகழ்ந்துள்ளார். சிறுத்தொண்டருடைய இயற்பெயர், பரஞ்சோதியார் என்பது. இவர் பல்லவ அரசர்களுள் கி. பி. 630—668 வரை ஆட்சி செய்த முதலாம் நரசிம்ம வர்மனுடைய படைத்தலைவர்; அரசன் ஏவலால் சாளுக்கியருடைய தலைநகராகிய வாதாபியை வென்று வாகை சூடியவர். இவ்வெற்றியை ''மன்னவர்க்குத் தண்டுபோய்'' என்ற பெரிய புராணப் பாடல் பகரும். வாதாபி அழிக்கப்பட்ட காலம் கி. பி. 642. எனவே சம்பந்தர் சிறுத்தொண்டரைச் சந்தித்த காலம் ஏறத்தாழக் கி. பி. 650 ஆகலாம். சம்பந்தர் காலத்துப் பாண்டிய அரசன் நெடுமாறன். இவனைச் சுந்தரர் ''நிறைக்கொண்ட சிந்தையான் நெல்வேலி வென்ற நின்ற சீர் நெடுமாறன்'' என்பர். ''வில்வேலிக் கடல்தானையைநெல்வேலிச் செருவென்றும்'' என்று வேள்விக்குடிச் செப்பேடுகளில் கூறப்பெறும் நெடுமாறன் கி. பி, 640—680 வரை ஆட்சி செய்தவன். எனவே, சம்பந்தர் கி, பி. 640 க்கும் 660 க்கும் இடைப்பட்ட காலத்தவர் ஆவர்.

திருநாவுக்கரசர் காலம் :

திருநாவுக்கரசர் காலத்துப் பல்லவ அரசன் மகேந்திர வர்மனும், அவன் மகனாகிய முதலாம் நரசிம்மவர்மனும் ஆவர். மகேந்திரவர்மன் கி. பி. 615–630 வரை ஆண்டவன். இவன் முதலில் சமண சமயச் சார்பினனாக இருந்தவன் ; சித்தன்னவாசல் என்ற ஊரில் சமணர் குகைக்கோயில் இவனால் அமைக்கப்பெற்றது. இவன் சமண சமயத்தில் இருந்தபொழுது திருநாவுக்கரசருக்குப் பல இன்னல்களை விளைவித்தான் ; பின் தானும் சைவனானான் ; பாடலிபுரத்தில் (திருப்பாதிரிப்புலியூரில்) இருந்த சமணப் பள்ளி களையும் பாழிகளையும் இடித்துத் திருவதிகையில் குணபரவீச்சரம் அமைத்தான். குணபரன் என்பது மகேந்திரனின் சிறப்புப் பெயர் களுள் ஒன்று. மகேந்திரன் சைவனான செய்தி திருச்சிராப் பள்ளிக் கல்வெட்டுக் கூறுகிறது. அதன் தமிழாக்கம்; "லிங்கத்தை வழிபடும் குணபரன் என்னும் பெயர்கொண்ட அரசன் இந்த லிங்கத்தினால் புறச்சமயத்திலிருந்து திரும்பிய ஞானம் உலகத் தில் நீண்டநாள் நிலைநிற்பதாக" என்பது. மகேந்திரன் அமைத்த குகைக்கோயில்களுள் சீயமங்கலம், பல்லாவரம், வல்லம், தளவானூர், திருக்கழுக்குன்றம், திருச்சிராப்பள்ளி என்னும் இடங்களில் குடையப்பட்டவை சிவன்கோயில்களாம். இவன் சைவத்தைச் சார்ந்த காலம் கி. பி. 620 ஆக இருக்கலாம். திருநாவுக்கரசர் இருமுறை சம்பந்தரோடு தலயாத்திரை செய்துள்ளார், திருநாவுக்கரசர் கைலையாத்திரையில் இருந்த பொழுது சம்பந்தர் சோதியிற்கலந்தார். இஃது ஏறத்தாழக் கி. பி. 655—660-ல் நிகழ்ந்திருக்கலாம் ; இதற்குப் பின்னும் சில ஆண்டுகள் (தம் 81-ஆவது வயதுவரை) வாழ்ந்தார். ஆகவே திருநாவுக்கரசர் கி. பி. 660 வரை வாழ்ந்தவராகக் கொள்ளலாம்.

சுந்தரர் காலம் :

சுந்தரர் தம் காலத்து அரசரைக், "கடல்சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான் காடவர்கோன் கழற்சிங்கன்" என்று பாடியுள்ளார். நந்திக்கலம்பகத்திற்கண்ட "பல்லவர் கோளரி," "கழல்நந்தி" என்ற தொடர்களைச் சேர்த்து மூன்றும் நந்தி வர்மனைக் கழற்சிங்கன் என்பர் சிலர், மூன்றும் நந்திவர்மன் 825—850 வரை ஆண்டவன், உரிமையால் பல்லவர்க்குத் திறைகொடா மன்னவரை மறுக்கஞ்செய்யும் பெருமையால் புலியூர்ச் சிற்றம்பலத் தெம்பெருமானைப் பெற்றும் அன்றே" என்ற தேவாரத்தால் சுந்தரர்காலத்து அரசனுக்குச் சிற்றரசர் சிலர் திறைகொடுக்க மறுத்தனர் என்றும், அத்தகைய நிலை

தந்திவர்வனுக்கு (கி. பி. 775—825) ஏற்பட்டிருக்கக் கூடும் என்றும், எனவே தந்திவர்மன் காலத்தில் சுந்தரர் வாழ்ந்தார் என்றும் கூறுவர். 'காடவர்கோனுக்குத் திறை செலுத்த மறுத்தனர்' என்று அப்பாடற் பகுதியின் கருத்தாகக் கொள்ளாமல், 'பல்லவர் சார்பில் இறைவன் நிற்றலையும், பல்லவர்க்குத் திறை கொடாதவரை வருத்துதலையும் குறிப்பதாகப் பொருள்கொள்வார் பிறிதொருசாரார். இனிச் சுந்தரர் குறித்த கழற்சிங்கன், கி. பி. 685—705 வரை ஆண்டவனும், சிறந்த சிவபக்தனும், காஞ்சியில் கயிலாசநாதர்கோயில் எடுப்பித்தவனும், ஸ்ரீ சங்கர பக்தன் ஸ்ரீ ஆகமப்பிரியன் - சிவசூடாமணி முதலாகப் பல விருதுப் பெயர்கள் உடையவனும், நரசிங்கவர்மன் என்ற அபிடேகப் பெயர்பூண்ட இராசசிம்மனே ஆவன் என்பர் பிறிதொருசாரார். சுந்தரரை இளமையில் 'அரசிளங்குமரற் கேற்ப அன்பினால் மகன்மைகொண்டவர்; நரசிங்க முனையரையர் என்ற சிற்றரசர், அரசனுடைய பெயரைச் சிற்றரசர் சூட்டிக் கொள்வது மரபு. அம்முறையில் இந்நரசிங்க முனையரையரும் தம் அரசர் பெயரைச் சூடிக்கொண்டவர் ஆவர். ஆகவே 7ம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த இராசசிம்மன் காலத்தவ ராகவே சுந்தரரைக் கொள்ளுதல் மிகவும் பொருத்தமுடைய தாகும்.

மாணிக்கவாசகர் காலம் :

சுந்தரர் மாணிக்கவாசகரைத் திருத்தொண்டத்தொகையில் குறிப்பிடவில்லை. பட்டினத்தடிகளும், வித்தகப் பாடல் முத்திறத்து அடியார்களுக்குப் பிறகே திருந்திய அன்பிற்பெருந் துறைப் பிள்ளையாகிய மாணிக்கவாசகரைக் குறித்திருக்கிறார். மூவர் தேவாரத்துக்குப் பிறகே 8-ஆவது திருமுறையாகத் திருவாசகத்தை அமைத்திருக்கிறார்கள். வையைத் திருக்கோட்டில் நின்றதோர் திறமும் தோன்றும் - குடமுழநந்திசனை வாசகனுக் கொண்டாய் - நரியைக் குதிரை செய்வானும் என்ற அப்பர் தேவாரம் மாணிக்கவாசகர்க்குரிய செய்திகளைக் குறிப்பன அல்ல. சங்கரர் வாழ்ந்த காலம் 9-ஆம் நூற்றாண்டு. சங்கரரது அத்துவிதம், மாயாவாதம் எனப்பெறுவது. அதனை மாணிக்கவாசகர் "மிண்டிய மாயாவாதமென்னும் சண்டமாருதம்" என்பர். மாணிக்கவாசகர் வரகுணன் என்ற பாண்டிய அரசனைக் குறிப்பிடுகிறார். இவனைச் சின்னமனூர்ச் செப்பேடுகள், "கொற்றவர்கள் தொழுகழற்கால் கோவரகுண மகாராசன்" என்று சிறப்பிக்கின்றன. இவனை முதல் வரகுணன் என்பர். இவன் கி. பி. 792 முதல் 835 வரை ஆண்டவன். இவனே தென்பெண்ணையாறு

வரை தொண்டைநாட்டையும் சோழநாட்டையும் தன்னடிப் படுத்தியவன். இவ்வரகுணனை மாணிக்கவாசகர், "வரகுண னும் தென்னவன் ஏத்து சிற்றம்பலத்தான்" என்று புகழ்வர். எனவே, வாதவூரடிகள் ஆகிய மாணிக்கவாசகப் பெருமான் கி. பி. ஒன்பதாம் நூற்றுண்டின் முதற்பகுதியில், முதல் வரகுண பாண்டியன் காலத்தில் வாழ்ந்தவர் என்று கூறுதல் சாலவும் பொருந்தும்.

சைவசமய சந்தான குரவர் :

சந்தானகுரவர் ஆவார் மெய்கண்டதேவர், அருள்நந்தி சிவம், மறைஞானசம்பந்தர், உமாபதிசிவம் எனும் நால்வர்.

மெய்கண்டார் காலம் :

மெய்கண்டார் காலத்தை அறிவதற்குத் திருவண்ணுமலைக் கல்வெட்டொன்று பயன்படுகிறது. அக்கல்வெட்டுப்பகுதி பின் வருமாறு:—

"ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்ரவர்த்திகள் ஸ்ரீ ராஜராஜ தேவர்க்கு யாண்டு பதினுருவது .... உடையார் திருவண்ணு மலையுடைய நாயனுர் கோயில் சீமாகேசுவரக் கண்காணி செய் வார்களும் தேவர்கன்மி கோயில் கணக்கனும் திருவெண்ணெய் நல்லூருடையான் மெய்கண்டதேவன் ஊருடைய பெருமாளான எடுத்தது வலிய வேளார்க்குக் கல்வெட்டிக்கொடுத்த பரிசாவது இந்நாயனுர் தேவதானம் செங்குன்ற நாட்டு மரத்தூரான இராசராச நல்லூரில் இவர் வெட்டுவித்த மெய்கண்ட தேவப் புத்தேரிக்குக் கடமையிறுக்குமிடத்துத் திருத்தின ஆண்டு .... இவ்வேந்தரில் திருத்தப்பட்ட நிலத்திலே இவ் விராசராசநல்லூ ரில் எழுந்தருள்விக்கிற உடையார் மெய்கண்டீசுவரமுடைய நாயனுர்க்குப் பூசைக்கும் அமுதுபடிக்கும் மூன்றில் ஒன்று தேவதானமாகவும் ...."

இதிற்குறித்த அரசன் கி. பி. 1216 முதல் 1256 வரை ஆண்ட மூன்றும் இராசராசசோழன் ஆவன். எனவே இக் கல்வெட்டின் காலம் கி. பி. 1232 ஆகிறது. இக் கல்லெழுத்தில் குறிக்கப்பெற்றவர் சிவஞானபோதம் அருளிய மெய்கண்ட தேவர் என்பர் ஒருசாரார். இன்னெருசாரார் மெய்கண்டா ருடைய மாணக்கருள் ஒருவர் இக் கல்வெட்டில் குறிக்கப்பெற்ற வர் என்றும், அவர்க்கு எடுத்தது வலிய வேளார் என்பது பெய ராகும் என்றும், மெய்கண்ட தேவர் என்பது அவர்தம் ஆசிரியர்

பெயர் என்றும், தம் ஆசிரியர் பெயரோடு சேர்த்து அவர் வழங்கப்பட்டார் என்றும், தம் ஆசிரியர் பெயரால் மெய்கண்ட தேவப்புத்தேரி என்ற ஏரியும், மெய்கண்டீச்சரம் என்ற கோயி லும் மரத்துரராகிய இராசராசநல்லூரில் நிறுவினர் என்றும் கூறுவர். மெய்கண்டார் தம் பெயரால் கோயிலும் ஏரியும் நிறுவினர் என்பதனினும், மெய்கண்டார் மாணுக்கருள் ஒருவர் தம் ஆசிரியர் பெயரால் நிறுவினர் என்பது பொருத்தமுடைய தாகும். எங்ஙனம் ஆயினும் கி. பி. 1232க்கு அண்மைக் காலத் தில் மெய்கண்டார் வாழ்ந்தவர் என்பது உறுதி.

உமாபதிசிவாசாரியர் காலம்

சந்தான குரவருள் நான்காமவர் உமாபதிசிவாசாரியர் ஆவர். இவர் எழுதிய சாத்திர நூல்கள் எட்டு. அவற்றுள் சங்கற்ப நிராகரணம் என்பது ஒன்று. அந்நூல் எழுதப்பட்ட காலம்,

"ஏழஞ் சிருநூறு எடுத்த வாயிரம்
வாழிநற் சகனம் மருவா நிற்ப"

என்று உமாபதி சிவாசாரியர் அந்நூலுட் கூறியுள்ளார். அதா வது சகம் 1235க்குச் சமமான கி. பி. 1313ல் அந்நூல் இயற்றப் பெற்றது. எனவே உமாபதிசிவம் 14-ஆம் நூற்றுண்டின் முற்பகுதியில் விளங்கினுர் என்பது உறுதி.

ஆகவே சந்தான குரவர் நால்வரும் 13-ம் நூற்றுண்டிலும் 14-ம் நூற்றுண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தவர் ஆவர்.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil.

The maintenance of the temple is good and the whole place is clean which gives one congenial atmosphere for prayer and concentration. The temple and surroundings is developing under the helpful hands of the staff. Pranams to the presiding Deity.

(Sd.) T. Devarajan,
25—11—65. Peishkar T. T. Devasthanams, Tirupathi
(A. P.)

அரைக் கண்ணன்

அமுதமொழிக்கொண்டல்,

திருமுருக. கிருபானந்தவாரியார் அவர்கள்

[வீட்டையும் நாட்டையும் அழகுறச் செய்பவர் புலவர்: புலவரால் நாடு பொலிவுறும். விளக்கொளி வீசுவது போல், தெய்வப்புலவர் ஞான வொளியைப் பரப்புவர். அவர் பாடல்கள் விருந்தமுதாக இருந்து பவப்பசியை மாற்றி, சிவத்துவத்தை வழங்குகின்றன. சிவபெருமானை "அரைக் கண்ணன்" என விவரிக்கும் ஓர் அருளமுதப் பாடலை இக்கட்டுரை விளக்குகின்றது.]

ஒரு வீடு எத்துணை உயர்ந்திருப்பினும், அகன்றிருப்பினும், ஆசனாதிகள் அமைந்திருப்பினும் அழகுபெறமாட்டாது. அந்த வீட்டில் விளக்குகள் இல்லையானால் இருள்பரவியிருக்கும். பகலாக இருப்பினும் மூதேவி நடமாடுவாள். ஒரு திருவிளக்கு எரியுமேல் அந்த வீடு மங்கலமாகத் திகழும். எனவே வீட்டை அழகுறச்செய்வது விளக்கு.

நாடும் புலவரும்

அதுபோல் நாட்டை அழகுறச் செய்பவர் புலவர். புலவரால் நாடு பொலிவுறும். விளக்கு இருளை நீக்குவதுபோல், புலவர் அறியாமையாகிய இருளை அகற்றுவர்; விளக்கு ஒளி வீசுவது போல் புலவர் ஞானவொளியைப் பரப்புவர்.

அவ்வாறு நமது தமிழகத்தில் அஞ்ஞான இருளை நீக்கி ஞானவொளியைத் தந்த புலவர்கள் பலர் அவ்வப்போது தோன்றி நாட்டை அலங்கரித்தார்கள்.

விருந்தமுதம்

திருவள்ளுவர், சேக்கிழார் பெருமான், ஒட்டக்கூத்தர், கம்ப நாடர், புகழேந்தி, காளமேகம், இரட்டைப் புலவர், வில்லி புத்தூரர், சிவப்பிரகாசர், குமரகுருபரர் முதலிய பலப்பல அறிவுச்சுடர்கள் தோன்றினர். அவர்கள் பாடிய பாடல்கள் இன்றும் குன்றாமல் நின்று நிலவுகின்றன. அவைகள் வானோர் விருந்தமுதாக இருந்து பவப்பசியை மாற்றி சிவத்துவத்தை வழங்குகின்றன.

அன்றியும் சிந்தனையைத் தூண்டி விடுவனவாகவும், சில பாடல்கள் உன்னுந்தோறும் உன்னுந்தோறும் உவட்டாத உவகையை ஊட்டுவனவாகவும் அமைந்துள்ளன.

முக்கண்ணன்

ஒரு விஷயத்தை இங்குச் சிந்திப்போம். சிவபெருமானுக்கு மூன்று கண்கள். அப்படியே அம்பிகைக்கும் மூன்று கண்கள். திரியம்பகி என்று பேர்.

" அமலையாரியை அந்தரி சுந்தரி
இமய மாமயில் அம்பைத்ரி யம்பகி "

என்பது திருவகுப்பு.

விநாயகருக்கும் மூன்று கண்கள். " த்ரியம்பகவிநாயகன் " என்று கூறுகின்றார் அருணகிரிநாதர். மயில் விருத்தத்திலே, முருகருக்கும் மூன்று கண்கள். எனவே அந்தக் குடும்பத்திலே அம்மா, அப்பா, குமாரர்கள் எல்லோருக்குமே மூன்று கண்கள்.

" த்ரிலோசனாய நம : " என்று ஒரு மந்த்ரமும் உண்டு.

த்ரியம்பகம் என்பது ஒரு தலம். அது கோதாவரி நதி உற்பத்தியாகும் இடத்திலே உள்ளது. பன்னிருஜோதி லிங்கத்திலே ஒன்று.

இனி வேதத்திலேயும் சிவபெருமானைப்பற்றித் திரிலோசனன் என்று பல இடங்களில் வருகின்றது.

" த்ரயீவேத்யம் ஹ்ருத்யம் த்ரிபுரஹரமாத்யம் த்ரி நயனம் " என்று சிவானந்தலகரி பேசுகின்றது.

இப்படியெல்லாம் சிவபெருமானை முக்கண்ணன் என்று கூறுவது மலையிலக்கு.

ஒன்றரைக்கண்ணன்

இங்ஙனமிருக்க, அப்பர் சுவாமிகள் சிவபெருமானைப் பாட வந்தார்.

சிவபெருமானை முக்கண்ணர் என்று கூறுகின்றனர் ஆனால் அவரை ஒன்றரைக்கண்ணர் என்று கூறவேண்டும். ஏனென்றால் சிவமூர்த்தி உமாதேவிக்கு இடப்பாகம் ஈந்தனர், ஒரு பாதி உமை. ஒரு பாதி சிவம். அந்த முறையில்

ஒன்றரைக்கண் உமா தேவிக்குரியது போக, சிவனுக்குரியது ஒன்றரைக்கண்தான். ஆதலால் சிவபெருமான் ஒன்றரைக் கண்ணர் என்கிருர்.

இன்றரைக்கண்ணுடையார் எங்குமில்லை இமயமென்னும்
குன்றரைக் கண்ணன் குலமகட் பாவைக்குக் கூறிட்டதாள்
ஒன்றரைக்கண்ணுங் கொடுத்துமை யானையும் பாகம் வைத்த
ஒன்றரைக் கண்ணன் கண்டீர் ஒற்றியூருறை உத்தமனே!

இது திருநாவுக்கரசு நாயனர் தேவாரம்.

இப்போதும் உலக வழக்கிலே சில மாறு கண்ணரைக்கண்டு அவன் ஒன்றரைக்கண்ணன் என்று கூறிப் பரிகசிப்பர். இது போல் நகைச்சுவை தோன்ற அப்பரடிகள் அரனை நோக்கி, "இவர் முக்கண்ணர் அன்று; ஒன்றரைக்கண்ணர்" என்று நயமாகக் காரணங்காட்டிக் கூறுகிருர்.

இப்படி உலகப் பெரு வழக்காகவுள்ள முக்கட் பெருமானை ஒன்றரைக்கண் உத்தமன் என்று கூறுவதானல், அது எத்துணைப் புரட்சியும் வியப்புமாகும்.

அரைக் கண்ணர்

இனி, இதனை மற்றொரு புலவர் மறுபடியும் ஒரு புரட்சி செய்கின்ருர். சிவபெருமானை முக்கண்ணர், முக்கண்ணர் என்று முன்னேர்கள் மொழிகின்றனர். அது ஒரு காலத்துக்குப் பொருந்தியதுதான். இப்போது அது பொருந்தாது. ஆகவே சிவபெருமானை இனி யாரும் முக்கண்ணர் என்று மொழிய வேண்டாம். அவர் அரைக் கண்ணர்; உண்மை அதுதான். ஏன் என்பீர்களாயின் கூறுகின்றேன்: கவனமாகக் கேண்மின்.

இப்பெருமான் மாதொருகூறன்; அதாவது அர்த்தநாரி; இடப்பாகம் இமயவல்லிக்கு உரியது. அந்த முறையில் ஒன்றரைக்கண் பார்வதிக்கு உரியது. இனி வலப்பக்கமுள்ள ஒன்றரைக்கண்ணிலே கண்ணப்பன் தந்த கண் ஒன்று. ஆக இரண்டரை போக, மிகுந்து நின்றது அரை தானே; ஆகவே இவர் அரைக்கண்ணர் என்று சுவையாகக் கூறுகின்ருர். இப்படிக்கூறிய புலவர், பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்.

அப்பாடல் இதோ:

முக்கண்ணன் என்றரனை முன்னேர் மொழிந்திடுவர்
அக்கண்ணற் குள்ள தரைக்கண்ணே-மிக்க
உமையாள்கண் ஒன்றரை; மற் றூன்வேடன் கண்ணென்
றமையுமித னலென் றறி.

முல்லைப்பாட்டு

செஞ்சொற்கொண்டல்
வித்துவான். திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ.,
மொழியியல்துறை, அண்ணாமலைப்பல்கலைக் கழகம்

பாட்டின் விந்தை :

"பாட்டு கலைகளில் எல்லாம் சிறந்தது என்று சொல்லப் படுவது ஏன்" என்று எனக்குப் பல நாட்களாக ஒரு சிந்தனை. இலக்கிய நண்பர் ஒருவரைக் கேட்டேன். நானும் அவரும் சிந்தித்தோம், அளவளாவினோம். அவர் சொன்னார்; "மற்ற கலைகள் எல்லாம் நுண்மையாய் அமைந்த உயிரைச் சென்று பற்றுவதில்லை. ஆனால் பாட்டுக்கலை மட்டும் இன்பத் துன்ப உணர்ச்சிகளை உள்ளத்தே எழுப்புகிறது. நம்மோடு நாமாகக் கலந்துவிடுகிறது" என்றார் நண்பர். ஆம்; உண்மைதான். கவிஞனின் கருத்து என்னும் கனவுலகத்துக்கு நம்மை மெல்ல மெல்ல அழைத்துச் செல்லுகிறது பாட்டு. கற்பனை என்ற அமுத விருந்து அங்கே காத்திருக்கிறது; இன்பத் தென்றல் காத்திருக் கிறது. உலகை மறந்து பாட்டிலே கலந்து விடுகிறோம்; இது பாட்டுச் செய்யும் அற்புதமா? இல்லை; பாவலன் புரியும் விந்தையா?

பத்துப்பாட்டில் ஒருபாட்டு :

சங்கப்பாட்டு நூல்களில் ஒரு தொகை நூல் பத்துப்பாட்டு. இதில் திருமுருகாற்றுப்படை முதல் மலைபடுகடாம் இறுதியாகப் பத்து நெடும் பாட்டுக்கள் உள்ளன. பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் பத்துப்பாட்டாதி மனம் பற்றினர் பற்றுவரோ எத்திசையும் பொருட்கிசையா இலக்கணமில் கற்பனையே" எனப் புகழ்ந்து பாடியுள்ளார்கள். இது வெறும் புகழ்ச்சி யன்று; உண்மை. இதனுள் ஐந்தாவது பாட்டாக அமைந்திருப்பதே முல்லைப்பாட்டு.

காவிரிப்பூம் பட்டினத்தில் சங்க காலத்திலே ஒரு பொன் வாணிகர் வாழ்ந்தார். அவருடைய புதல்வர் நப்பூதனார் என்ற நல்லறிஞர். அந்தக் கவிஞர்பிரான் தமிழுலகுக்கு அருளிய இலக்கியப்பரிசுதான் இம் முல்லைப்பாட்டு.

இனிய கவிக்காட்சிகள் :

பழைய காலத்தில் தலைவன் தலைவியர் காதல் உறவிலே அவ்விருவரும் கூடியிருக்கும் ஒழுக்கத்தைக் குறிஞ்சி எனக் குறிப் பார்கள். இருவரும் பிரிந்து துன்புறலைப் பாலை எனப் பகர் வார்கள். தலைவனைப் பிரிந்து ஆற்றியிருக்கும் தலைவியின் நிலையை முல்லையென மொழிவார்கள். இருவர்க்குமிடையே சிறிது பிணக்கு ஏற்பட்டால் அதனை மருதம் என்பார்கள் பிரிந்தபோது உண்டாகும் இரங்கலை நெய்தல் என்று உரைப் பார்கள்.

இவற்றுள் முல்லை நிலையைப்பற்றி – தலைவனைப் பிரிந்த தலைவி யொருத்தியின் தவிப்பு நிலையைப்பற்றி புனைந்துரைப் பதே இம்முல்லைப்பாட்டு, நாடகம் போன்ற நல்ல கவிக்காட்சிகள் சிலவற்றை இங்கே காட்டுகிறார் இக்கவிஞர்.

அரண்மனையில் :

அது மாலைக் காலம்; மழைக் காலத்து மாலை, இப்போது தான் 'கொட்டுக் கொட்' டென்று மழை கொட்டித் தீர்த்திருக் கிறது. மழை பொழிந்த மேகமோ நீலநிறக் கண்ணன் ஒரு கையில் சங்கும், மற்றொரு கையில் சக்கரமும் ஏந்தி அன்றொரு கால் விசுபரூபங் கொண்டானே, அந்தத் திருக்கோலத்தை நினைவு படுத்துகிறது.

> "நேமியொடு, வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
> நீர்செல நிமிர்ந்த மாஅல் போல"

என்கிறார் கவிஞர். இப்படித் தொடங்குகிறது பாட்டு. இறை வனை நினைத்தே தமிழ்க்கவி தொடங்கும் என்பதற்கு இதுவும் ஒரு சான்று அல்லவா?

இந்த மாலை நேரத்தில், அந்த அரசனைப் பிரிந்த அரசமா தேவி மிகவும் வருந்துகிறாள். வருவதாகச் சொல்லிச் சென்ற காலம் வந்துவிட்டதே; காதலன் வரவில்லையே என்பது அவள் கவலை. அவள் தோழியர் அவளைப் பல வகையிலும் தேற்றிப் பார்க்கிறார்கள், பயனில்லை. "சரி; தேவி! நாங்கள் வெளியிற் சென்று தலைவர் வந்துவிடுவாரா என்பதற்குச் சகுனம் பார்த்து வருகிறோம்" என்று கூறிவிட்டுச் சிலவயது முதிர்ந்த தோழியர் புறப்படுகிறார்கள். இவ்வாறு நற்சொல் கேட்கும் பழக்கத்தை 'விரிச்சி கேட்டல்' என்று சங்க நூல்கள் கூறும்.

முல்லைப் பூக்களையும், நெல்லையும் தூவிவிட்டுக் கை கூப்பி நிற்கிருர்கள் அப்பெண்கள்! அங்கே ஓர் இளங்கன்று தன் தாய்ப்பசுவின் வருகைக்காகக் காத்திருக்கிறது; அதன் மன ஏக்கத்தைப் புரிந்துகொண்டவளாய் ஓர் இடைப்பெண் குளிரால் நடுங்கும் தன் கழுத்தை இருகைகளாலும் கோர்த்துக்கொண்டு, "ஏ கன்றே! ஏன் வருந்துகிருய்? உன் தாய் இன்னும் சிறிது நேரத்தில் வந்துவிடுவாள்" என்று கூறிய வார்த்தைகள் சகுனங்கேட்கக் காத்திருக்கும் அப்பெண்களின் செவிகளில் விழுகின்றன. மகிழ்ச்சி அவர்களுக்கு, அரசமாதேவியிடம் ஓடோடி வருகின்ருர்கள். 'தேவி! நல்ல வார்த்தை கிடைத்து விட்டது. ஆம்; சேயை நோக்கித் தாய் வருவது போலவே தங்களை நோக்கித் தங்கள் காதலர் – எங்கள் முடிமன்னர் நிச்சய மாகத் தாம் மேற்கொண்ட போரில் வெற்றிபெற்று பகைவர் தந்த திறைப்பொருளோடு விரைந்து வருவார்; தாங்கள் கவலை தீர்தல் வேண்டும்' என்று தேற்றுகிருர்கள்.

இவ்வாறு பலப்பல கூறித் தேற்றினும் அவள் மனம் படாத பாடு படுகிறது; கண்ணீர்த்துளிகள் அவளையுமறியாது அவள் மலர்க் கண்களினின்றும் பொலபொலவென்று உதிர்கின்றன. அவள் முத்துக்களோ, உதிர்க்கிருள். என்று வியக்கிருர் கவிஞர். "பூப்போல் உண்கண் புலம்புமுத்துறைப்ப" என்பது அவ் வாக்கு.

போர்க்களப் பாசறையில் :

காட்சி திரை மாறுகிறது. தலைவியாகிய - அரசமாதேவியை அரண்மனையில் இவ்வாறு நமக்கு அறிமுகப்படுத்திய ஆசிரியர் இப்போது போர்க்களக் காட்சிக்கு நம்மை அழைத்துச்செல்கிருர்.

போர் முடிந்து விட்டது. வெற்றி பெற்றுவிட்டான் வேந்தன். அவன் பாசறையில் தங்கி இருக்கிருன். அந்தப் பாசறை - பாடிவீடு எவ்வளவு ஏற்றமும் தோற்றமும் உடையது!

காட்டாறு ஒன்று அதைச் சுற்றி ஓடுகிறது. அந்தக் காட்டுப் பகுதியில் பிடவம் முதலிய பெருமரங்களை வெட்டி புதர்களையும் அழித்துவிட்டார்கள் அவன் படை வீரர்கள், வேடர்களின் சிறு அரண்களும் தொலைந்தன. முள்ளால் வேலி அமைத்தார்கள். தழைக்கூரை வேய்ந்த பல கூடாரங்கள் அமைக்கப்பட்டன அங்கே இன்னுமொரு காட்சி.

நல்ல யானைகள்; கரும்பு, அதிமதுரத்தழை ஆகியவை அவற்றுக்கு முன்னுல் தின்னப்படாமற் கிடக்கின்றன. இவை மிக

விருப்பமான உணவுப்பொருள்கள் தாம் இவற்றை உண்ணாமல் போரையே நினைந்தபடி இருக்கும் அந்த யானைகளைப் பாகர்கள் பரிக்கோலால் குத்தி வடமொழியாற் பேசி, கவளத்தை உண்ண வைக்கிறார்களாம். இப்படி ஒரு காட்சி.

இக்கூடாரங்களுக்கு நடுவில் இருக்கிறது மன்னன் கூடாரம். அதைச் சுற்றி வேல்கள் வேலியாக நிற்கின்றன. விற்களையும் தூணிகளையும் நிறுத்தி, அவற்றின்மேல் கயிற்றாலே வலிந்து இழுத்துக் கட்டப்பெற்ற கூடாரம் அது. காவியாடை உடுத்தவனும் விரத ஒழுக்கம் உடையவனுமான அந்தணனின் முக்கோல் போன்றது இது என்கிறார் புலவர், " கற்றோய்த்துடுத்த படிவப் பார்ப்பான், முக்கோல் அசைநிலை கடுப்ப'' என்பது வாக்கு, பல வண்ணத் திரைகள் தொங்குகின்றன, உள்ளே தொங்கும் விளக்குகள் இரவைப் பகல் ஆக்குகின்றன. அவ்வளவு ஒளி வெள்ளம். அழகிய சில பெண்கள் கையிற்பிடித்த நீண்ட கோல்களால் அவ்விளக்குகள் அணையாமல் திரிகளைத் தூண்டி விட்டபடித் திரிகின்றார்கள்.

தலைப்பாகைகட்டிச் சட்டையிட்ட மெய்காப்பாளர் காவலாகச் சூழ்ந்து உலவி வருகிறார்கள்.

அப்போது நடுயாமம் ; நள்ளிரவு,

நாழிகைகளை அளந்து கூறும் நாழிகைக் கணக்கர்கள் அரசனை வந்து வாழ்த்தி ''அரசே! நின்னுடைய நாழிகை வட்டிலில் இவ்வளவு நாழிகை சென்றுவிட்டது'' என்று கூறுகிறார்கள். அப்போதுதான் அவனுக்கு நேரம் கடந்துவிட்டது என்று நினைப்புவருகிறது.

உடன் எழுகின்றான் ; புற அறைக்கு உள்அறையிற் செல்கின்றான்; நல்ல வண்ணத்திரை தொங்குகிறது. அங்கு மாணிக்கம் சுடர்விட்டெரிந்து கொண்டிருக்கிறது. புலிச்சங்கிலி விடப்பட்ட வாயிலை யவன வீரர்கள் காவல் புரிந்து நிற்கின்றார்கள்.

மன்னனைச் சூழ்ந்து இருக்கும் ஒரிருவரும் ஊமையர்கள். சைகை செய்தே தங்கள் எண்ணங்களை உரைப்பதில் வல்லவர்கள்.

படுக்கையில் புரள்கின்றான் மன்னன் ; உறக்கம் பிடிக்கவில்லையாம், போர்க்களத்திலே செஞ்சோற்றுக் கடன்கழித்து உயிர் துறந்த தியாகிகளை எண்ணுகின்றான் ; அம்புகளால் தாக்கப்பட்டு வீழ்ந்து கிடக்கும் குதிரைகளை நினைக்கின்றான்.

இவ்வாறு பல நினைவுகள். கையைத் தலைக்கு வைத்துக் கொண்டு படுத்துக்கிடக்கிருன். தலையணையைக் கூட அவன் உள்ளம் நாடவில்லை. "ஒருகை பள்ளி ஒற்றி ஒருகை, முடியொடு கடகம் சேர்த்தி" என்கிருர் கவிஞர் நப்பூதனர்.

காட்சி மாற்றம் :

இனி, அடுத்த காட்சி, மகளிர் நற்சொல் கேட்டும் மன அமைதி கொள்ளாத அரசமாதேவியின் அரண்மனைக் காட்சியைத் திருப்பி நம் கவனத்தை ஆங்கு நாட்டுகின்ருர் கவிஞர். எழுநிலை மாடத்திலே - பாவை விளக்கு சுடர்விட்டு எரியும் அவ்விரவு நேரத்தில் வருந்தியவாறே கிடக்கிருள் அவன் காதலி. நெடுந் தூரத்திலே பேரிரைச்சலோடு கொட்டுகின்ற அருவிகளின் ஓசை அவள் செவிகளில் விழுகிறது. கார்காலம் வந்து விட்டது என்று அந்த அருவி அவளுக்கு நன்கு எடுத்துக்காட்டுகிறது.

தோழியர் ஓடி வருகிருர்கள்; அவள் முகத்திலே வேதனை; அவர்கள் முகங்களிலே பரபரப்பு; 'வந்துவிட்டார் முடி மன்னர்! வந்துவிட்டார், தங்கள் கணவர்' என்று மகிழ்ச்சியுடன் கூவு கிருர்கள். ஆம்; அழகு பொங்கி வழியும் முல்லை நிலத்தின் காட்டுப்பெருவழியிலே அரசன் தேர் ஓடி வருகிறது. அதிற் பூட்டப்பெற்றுள்ள குதிரைகளின் ஆரவாரமும் ஏனைய படை களின் ஆரவாரமும் அவள் மனத்தை மகிழ்ச்சிக்கடலில் தள்ளு கின்றன. அவள் நெஞ்சில் இன்பவெறி யேறுகிறது, கொண்ட வன் வந்து விட்டான்: அவளுக்கு இனி என்றும் இன்பம்தானே.

இப்படி முடிகிறது இம் முல்லைப்பாட்டு, துன்பத்தில் தொடங்கிய பாட்டை இன்பத்தில் முடித்திருக்கிருர் நப்பூதனர். சங்கப் புலவரும் இதே முறையைப் பின்பற்றியுள்ளார். அழகிய, இனிய, தெளிந்த கவிநடை. ஆங்காங்குப் பொருத்தமான இடங் களில் பல உவமைகளைக் கையாண்டுயுள்ளார். பாட்டைத் தொடங்கும்போது அரண்மனையில் இருந்தோம்; பிறகு பாசறைக்குச் சென்ருேம். மீண்டும் நம்மை அரண்மனைக்குக் கொண்டுவந்து இன்பக் களிப்பில் நிறுத்துகிருர் கவிஞர்.

பிரிந்தவர் கூடினுற் பேசவும் வேண்டுமோ? என்று சொல்லாமற் சொல்லிவிடுகிருர்.

"பிரிந்தவரைச் சேர்ப்பதோடு ஏன் நின்றுவிட்டது பாடல்; அவர்கள் பேசும் இன்பமொழிகளோடு முடித்திருக்கக்கூடாதா" என்ருர் ஒரு நண்பர்.

"அங்குத்தான் ஐயா இருக்கிறது தமிழ்ப்பண்பு" "கண்ணொடு கண்ணிணை நோக்கு ஒக்கின் வாய்ச்சொற்கள் என்ன பயனும் இல" என்ற குறள்நெறி அங்கு விளங்குகின்றது. என்றேன் நான். உண்மைதான் என்று ஒத்துக்கொண்டார் நண்பர்.

சிறந்த அகத்திணைப் பாடலாக விளங்கும் இம் முல்லைப் பாட்டு பல்வேறு மனநிலை, அக்காலப் பண்புநிலை முதலியவைகளை விளக்கும் தமிழ் நிலையமாக விளங்குகிறது.

நப்பூதனார் உலகிற்கு வழங்கியுள்ள இவ்விலக்கிய வாசகத்தை உணர்ந்து பயின்று உலகு இன்புற வேண்டும், அதற்கு இச் சிந்தனை துணைபுரியும் என்பதே என் நம்பிக்கை.

வாழ்க பாட்டின்பம்!

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Veeratteswaraswami Devasthanam, Korukkai.

இத் தலத்தில் எழுந்தருளியிருக்கும் யோகீஸ்வரரைத் தரிசிக்கும் பேறு முருகன் திருவருளால் இன்று கிடைத்தது. தருமை ஆதீனத்தின் சிவத்தொண்டு என் குருநாதர் மேலே கூறியபடி மிகமிகச் சிறந்தது. இவ்வாதீனத்தின் சில கோயில்களைப் பார்த்துவருகிறேன். ஆலயங்களை ஆன்மா வியக்கக்கூடிய சிறந்த இடங்களாகப் பக்தர்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பது சிறந்த சாதனை. வாழ்க தருமை ஆதீனம். வளர்க ஆதீனத்தின் சிவத்தொண்டு. காமதகனம், காமத்தை அதாவது ஆசையை ஒழிக்கவேண்டுமென்பதை எப்பொழுதும் நினைவுப்படுத்துகிறது. இவ்வாலயத்திற்கு வந்து தரிசனம் செய்யும் அன்பர்கள் பற்றற்ற நிலையை இவ்விசன் அருளால் பெற்று பேரின்பம் அடையவேண்டுமென்பதே என் வேண்டுகோள்.

சிவனடியாரில் ஒருவன்,
(ஓ-ம்.) மு. கிருட்டினன்,
நிலவரி திட்ட உதவி அலுவலர்,
தஞ்சை.

10—11—65.

கல்லாடம் - திருக்கோவையார்

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,
வித்துவான். திரு. இராம. கோவிந்தசாமிப் பிள்ளை

" திருவுங் கல்வியுஞ் சீருந் தழைக்கவும்
கருணை பூக்கவுந் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய்நம துள்ளம் பழுக்கவும்
பெரு மாழத்துப் பிள்ளையைப் போற்றுவாம் "

இத் தொடர்மொழி, கல்லாடமும் திருக்கோவையாரும் என்னும் பொருள்பற்றிய கட்டுரையென அன்மொழித் தொகைப் பெயராய் விரியும். கல்லாடர் என்னும் கருத்தறல் பெயர்பெற்ற கல்லாடம் எனுஞ் சீரிய செந்தமிழிலக்கிய அகப்பொருட் கோவை யானது, கடவுள் வாழ்த்து வெண்பாவொன்றும் அகவற்பா இரண்டும் நூல் நுவலும் அகவற்பா நூறும் ஆக நூற்றுமூன்று செய்யுட்களை யுடையது. பிற்காலத் தான்றோர் மரபின்படி கடவுள் வாழ்த்தில் மூத்த பிள்ளையாரையும் முருகக் கடவுளையும் போற்றப்பட்டுள்ளது. நூலானது, சிலமேவும் ஆலவாய்ப் பரமனைப் பாட்டுடைத் (கோவை) தலைவனாகவும் ஐந்திணைக்குரிய உயர்வுறு மக்களை இருவகைக் கை கோளுக்குமுரிய கிளவித்தலை வனாகவும் கொண்டு, ஆலவாயான் மதுரை நான்மாடக்கூடவி லாற்றிய அறுபானான்கு திருவிளையாடல் வரலாறுகளையும் சிவ பராக்கிரமமாகிய சிறப்புக்களையும், கோவைக்குரிய நானூறு துறைகளுள், திருக்கோவையாரிற்கண்ட நூற்றிரண்டு கட்டளைக் கலித்துறைகட்குரிய நூறு துறைகளையும், அவற்றிற்கு விளக்கங் கூறுவதாய்ச் சொற்செறிவும் பொருட்செறிவும் மீக்கூர்ந்த நடையினையும் கற்போர் காமுறக் கவிவளமுறு பலவணிகளையும் உடைத்தாய் மிளிர்கின்றது.

திருக்கோவையார் சிற்றம்பலமுடையானையும், கல்லாடம் கூடலுடையானையும் (பொன்னம்பலத்தானையும் வெள்ளியம்பலத் தானையும்) நாயகவாசியாகவும் அமைத்து கிளவிவாசிகளைக் கிளப்பது பெருநயமுடைத்தாகவுடையதென்பது ஆராய்வார் தமக்கினிது புலப்படும்.

இவ்வகப் பொருட்டுறையிலக்கியங்கண்ட கல்லாடனூர், இறைவனை யுள்ளிட்ட நால்வருள் யாவர்தாம் ஆவர் எனவளந் தறிதலும் இன்றியமையாதாகின்றது.

" கல்லாடத்துக் கலந்தினி தருளி
நல்லா ளோடு நயப்புற வெய்தியும் "

எனவரும் திருவாசக வடிகளால் கல்லாடம் என்பது ஓர் சிவ திருப்பதி யென்பதும், அத்திருப்பதியிற் கோயில்கொண்டெழுந் தருளிய இறைவன் கல்லாடனூர் என்பதும் வெளிப்படை. இவ் வடிகளாற் போதரும் பருப் பொருள் நாயக நாயகி பாவமாகத் தென்பாலுகந்தாடுஞ் சிற்றம்பலவன் பெண்பாலுகந்து பேரின் பருளுகின்ருன் என்பதாம். இதனுற்ருன் பாண்டிநாட்டுப் பழந் தமிழ்ப் புலவராகிய கல்லாடர் அகப்பொருட்டுறைபற்றி யகவற் பாக் கோவை பாடினர் போலும்!

நிற்க, இறைவன் றிருப்பெயர் சூட்டியதாலேயோ ஊரிலு றைந்த காரணத்தாலேயோ பெற்ற பெயரினை யுடைய கல்லாடர் கடைச் சங்கப் புலவர் நாற்பானென்பதின்மருள் ஒருவர். இவர் கல்லாடமா மூலர் எனவழைக்கப்பெறுவர். இவர் காலத்தவர் நக்கீரர், பரணர், கபிலர் முதலானோராவர். இவர் செய்த பிரபந்தங்கள் பதினொராந்திருமுறையிற் சேர்க்கப்பெற்றுள்ளது. நம்பியாண்டார்நம்பி யென்பவரால், இறைவனின் வேருய மக்கட்பிறப்பினராய செந்தமிழ்ப் புலவராம் கல்லாடனூர் மூவர், இவருள், கண்ணப்ப தேவர் மறமும், சங்கச் செய்யுட்களுட் சில வும் பாடியவர் முதலாமவர். இவரே இவ்விலக்கிய நூலைக் கண்டவரெனச் சிலர் கருதுவது பொருத்தமுடைத்தாகாதெனல் பின்னர்க் குறிக்கப்பெறுஞ் சான்றுகளாற் புலனுகும். இங்ஙன மாக ஐயம் எழற்குக் காரணம், மாறுபாடான வரலாறென்று காணப்பெறலே. திருக்கோவையாரைச் சங்கப்புலவர்அவமதிப்பு செய்ததாகவும், அதுகுறித்துக் கல்லாடனூர் மாமதுரையீசர்மீது அக்கோவைத் துறைகளையமைத்துப் பாடி யரங்கேற்றுகையில் மாமதுரையீசரும் மனமுவந்து கேட்டு முடிதாமசைத்தார் நூறு. தரம் என்பதாகவும் அதுமுதற்கொண்டு ஆதிக்கோவையெனப் படும் சிற்றம்பலக்கோவையாரைப் போற்றிப் புகழ்ந்தனர் என வும் கூறுங் கட்டுக்கதையே.

" கல்லாடர் செய்பனுவல் கல்லா — நூறு நூல்
வல்லார் சங்கத்தில் வதிந்தருளிச் — சொல்லாயும்
மாமதுரை யீசர் மனமுவந்து கேட்டுமுடி
தாமசைத்தார் நூறு தரம் "

மாயூரம் குமரக்கட்டளை
ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானம்
கந்தசஷ்டி விழாவில் நிகழ்ந்த கந்தபுராண விரிவுரை
நிறைவு விழாவின் போது

அறநிலைய ஆணையர் திரு. M. S. சாரங்கபாணி முதலியார் B. A., B. L., அவர்களும், துணை ஆணையர், திரு. A. மார்க்கண்டவேல்ராஜன் அவர்களும், கந்தபுராண விரிவுரை யாற்றிய "அமுதமொழிக் கொண்டல்" திருமுருக. கிருபானந்தவாரியார் அவர்களும்

தருமையாதீனம் மாயூரம் குமரக்கட்டளை
ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானம் கந்தசஷ்டி விழாவில்



கந்தபுராண விரிவுரை யாற்றிய "அமுதமொழிக் கொண்டல்"
திருமுருக. கிருபானந்தவாரியார் அவர்களுக்குத் தருமையாதீனச் சார்பில்
ஆணையர் அவர்கள் பொன்னாடை போர்த்துதல்

எனும் சிறப்புப் பாயிரச் செய்யுள்கொடும் அவ்வரலாற்றினை வலியுறுத்துகின்றனர். கடைச் சங்க காலத்திற்குப் பிந்தியும் சங்கமுண்டெனல் தேற்றம். பதின்மூன்ரும் நூற்ருண்டில் வக்க பாகையை யாண்ட வரபதியாட் கொண்டான் என்னும் மன்ன வன்ருனும் நான்காஞ் சங்கமொன்று கண்டு தமிழ்ப் பெரும் புலவர்களையும் இலக்கியங்களையும் புரந்துவந்தான் எனல் வில்லி பாரதச் சிறப்புப் பாயிரத்தால் தெளியக்கிடக்கும். மதுரையிலும் கடைச் சங்கத்தின் பின்னர்ச் சங்கங்கள் தோன்றியிருத்தலும், தமிழாராய்ந்திருத்தலும் கூடும். வல்லார் சங்கம் என்பது கடைச் சங்கம் எனல் எங்ஙனங் குறிக்கப்பெறும்? இது குறித்து, சில்லாண்டுகட்கு முன்னர் கோபிநாத ராயர், சதாசிவம் பிள்ளை (நாகை), சதாசிவப் பண்டாரத்தார் முதலானோர் கல்லாடமெனும் நூல்பற்றி ஆராய்ந்துள்ளனர். இவர்கள் ஏன் இங்ஙனந் தலைப் பட்டனர் எனில், இற்றைக்கு 93 ஆண்டுகட்கு முன்னர் கல்லாட மெனும் நூல் புதுவைச் சுப்பராய முதலியாரால் அச்சிடப்பட் டுள்ளது. இக் கல்லாடமெனுநூலில் முதன் முப்பத்தேழகவல் கட்கு மயிலேறும் பெருமாள்பிள்ளை நுண்ணிதிற்கண்ட உரை யும் மேற்படி முதலியார் கண்ட 60 அகவற்பாக்களினுரையும் உரை குறிக்கப்பெருத 98, 99, 100 ஆவது அகவற்பாக்களும் திருக்கோவையார் நூற்றிரண்டு கலித்துறைகளின் கிளவிக்கும் உரிய பேராசிரியருரையும் காணப்பெறுகின்றன. தலைப்பின் கண், கடைச் சங்கப் புலவர் நாற்பான் ஒன்பதின்மருள் ஒருவ ராகிய கல்லாடனார் அருளிய கல்லாடம் என்றிருத்தலேயாம் என்க. தொல்காப்பியர் போலத் தொல்காப்பியத் தேவர் இருந்தார் என்பதும், அகத்தியர் போலப் பின்னரும் அகத்திய ராயினார் உளர் என்பதும் புலவர் வரலாற்ருனறியக்கிடக்கும். இதனால் இந்நூலாசிரியருக்கும் பெயர் போந்துளது.

ஒல்காப் பெருமைத் தொல்காப்பியத்திற்குரைகண்ட கல்லா டரும் ஒருவர் ஆவர்.

> " ஒல்காப் பெருமைத் தொல்காப் பியத்திற
> குரைவிடை யிட்ட விரகர் கல்லாடர் "

என்பதனுலஃது துணியக்கிடக்கின்றது. ஆகவே, கல்லாடம் எனும் அகப்பொருளிலக்கியங் கண்டவர் 13 ஆவது நூற்ருண் டில் வாழ்ந்தவராதல் வேண்டும். இக் கல்லாட நூலில், 7 ஆம் நூற்ருண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தர், மதுரையிற் பாண் டியன் சுரநோய் தீர்த்தது முதலிய செய்திகளும், 9 ஆம் நூற்ருண்டில் வாழ்ந்த ஆளுடைய நம்பிகளின் தோழராகிய

சேரமான் பெருமாள் நாயனுருக்குப் பாணபத்திரர் பொருட்டுத் திருமுகப்பாசுரமளித்த வரலாறும் குறிக்கப்பெற்றுள்ளமையும், உரையாசிரியர்களாகிய பரிமேலழகர், நச்சினர்க்கினியர், அடியார்க்குநல்லார், பேராசிரியர், இளம்பூரணர் முதலியவர்களால் தாமெழுதிய நூலுரைகளில் மேற்கோளாக இவ்விலக்கியங் காட்டப்பெறுமையும், இவர்கள் காலம் 12, 15 ஆம் நூற்றுண்டென அறியப்பெறலும் கொண்டு இக் கல்லாடர் காலம் 15 ஆம் நூற்றுண்டெனத் துணிந்தவாறுயிற்று.

சிற்றம்பலக்கோவையெனும் திருக்கோவையாரோ அன்பின் ஐந்திணையாகிய களவு (வரைவு) கற்பெனப்பெறும் ஒழுக்கங் கட்குரிய இருபானைந்து கிளவிகளையும், அக்கிளவிகட்குற்ற நானூறு துறைகளையுங்கொண்டு மிளிர்கின்றது. இது கலித்துறைச் செய்யுளாலாயது.

கோவையினில் வருமாறு :-

“ முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள் முகந்து
களவு கற்பெனும் வரைவுடைத் தாகி
நலனுறு கலித்துறை நானூ றாகி
யாறிரண் டுறுப்பும் ஊறின்றி விளங்கக்
கூறுவ தகப்பொருட் கோவை யாகும் ”

என்பது இலக்கணவிளக்கப்பாட்டியல் ஆகும். நற்றமிழ் இலக்கியமாகி 96 வகைப் பிரபந்தங்களுட் கோவை யென்பது இல்லறமெனும் நல்லறத்துட்படும் இன்பவொழுக்கங் கூறியதொரு (நாடகத் தமிழ்) நூலாகும். இது கோவைநூல்கட்குரிய இலக்கணமாயினும் திருக்கோவையார் இவ்வியலொடு வீட்டியலும் கூறும் பேரின்பக்கிளவி நூலாம்.

“ வருவா சகத்தினின் முற்றுணர்ந்தோனை வண்டில்லைமன்னை
தருவாத வூர்ச்சிவ பாத்தியன் செய்திருச் சிற்றம்பலப்
பொருவார் தருதிருக் கோவைகண் டேயுமற் றப்பொருளைத்
தெருளாத வுள்ளத் தவர்கவி பாடிச் சிரிப்பிப்பரே ”

என நம்பியாண்டார் நம்பிகள் சிறப்பித்துள்ளனர். சிற்றின்பக் கிளவிகள் போல பேரின்பக் கிளவியொடு படுத்துத் திருக்கோவையாருண்மையென வொரு பெருநூல் உளது. இதனைப் பதிப்பித்தவர் அடியேனுடைய அருளாசிரியருள் ஒருவராகிய அருட்டிரு சுவாமிநாத பண்டிதர் பெருமகனுவர்.

இத் திருக்கோவை ஆதிக் கோவை எனவும் வழங்கப்பெறும். ஆதியுலாவென வரல்போன்று; " முனிமொழியுங் கோவை " எனவும், " தொல்காப்பியம் திருவள்ளுவர் கோவையார் " என வும் பலவாருகச் சிறப்பிக்கப்பெறுமிந்நூலே மக்கள் திருச்சிற்றம் பலக் கோவையார் எனவும், மறையவர் ஆரணம் எனவும், சிவ போதத்தார் ஆகமநூல் எனவும், காமுகர் இன்பநூலெனவும், தருக்கர் எண் எனவும், தமிழ்ப்புலவர் இயனூல் எனவும் பலபடப் புனேவர். இந்நூலேப் பாடக் கேட்டவரும், கேட்டலோடமையாது எழுதியவரும் மறையவராகி முன்னின்றருளிய வேதாந்தமே தெளிந்த சைவ விழுப்பொருளாய் நாதாந்தமேயாய் நடித்தருள் நிறைபரம் பொருளேயாம்.

" ஓர்கலே யெங்கெங்கும் உலாவியர்த்த யாமத்தில்
பூரணமா யொன்றும் புலியூரோ "

எனவரும் அடிகளால் புலியூர்ப் புனிதன் சிறப்புடைமையறியப் பெறும். இதனைப்போலும் இக்கோவையாரிடைப் பரங்குன்று, கொடுங்குன்று, திருச்சுழியல், குற்ருலம், பூவணம், கூடல், பொதியில், பெருந்துறை (பாண்டிநாட்டகத்தன), வெண்காடு, கடம்பை, இடைமருது, வாஞ்சியம், அம்பர், ஏகம்பம், கழுக் குன்று, பழனம், ஈங்கோய் முதலிய சிவதிருப்பதிகள் காணப் பெறுகின்றன. இப்பதிகளில் உறைந்து சிவம் பெருக்கும் அப் பெருமானே தில்லேயம்பலக் கூத்தன் என்பது போதரா நிற்கும். புக்க திருத்தாண்டகமும் இதனே வலியுறுத்தும். இப்பதிகள் அக்காலத்தும் மிகப் பொலிவுற்று விளங்கினவெனல் புலப் படற்கே கோவையிற்றுறைகளிற் குறித்தருளினர்போலும்.

உலகியற்பொருளொடு வீட்டியற்பொருளும் ஒருங்கே நுதலி யெழுந்தது. ஆடகமன்றினில் ஐந்தொழில் ஆடல் புரியும் மதுரவாய் மொழி மங்கை யோர்பங்கினனேத் தலேவனுகக் கொண்டு மிளிர்வது இக்கோவையார். நாடகத்தானேப்பற்றியது நாடகத் தமிழ் தானே! கூடலுடையானுகிய சொக்கலிங்கப் பெருமானும் அறுபானுன்காடலாகிய நாடகம் நடிப்பவனன்ருே! இதனுல் இக்கல்லாடமும் நாடகத் தமிழெனல் தகும்.

(தொடரும்)

தர்மமும் தர்மபுர ஆதீனமும்

திரு. நீலகண்ட சர்மா

வேதங்களை அடிப்படையாகக் கொண்டு அதன் பின்னால் வந்தஸ்மிருதி, புராணம், இதிஹாஸம் இவைகளை ஆதாரமாக்கிப் பல்லாயிரம் வருடங்களாக நம் நாட்டில் நம்பிக்கையோடு பழகி வரும் தருமம் பண்பாடு என்ன? காலப்பழக்கத்தால் அதில் ஏற்பட்டுள்ள மாறுதல்கள் என்ன? இவைகளைத் தெரிந்து கொள்வது மிகவும் அவசியம்.

பிரான்ஸ் தேசத்துப் பேராசிரியர் ஒருவர் ஒரு நூலுக்கு முன்னுரை எழுதும்போது கீழ்க்காணும்படி சொல்லுகிறார்.

The study of all the best and the most essential datta, the very pith and marrow of Hindu tradition cannot but make up for the better improvement of Indian youths.

A. Barth (Paris)

தருமத்தை முதலில் இருவகைப்படுத்தலாம். சாதாரண தருமமென்றும் விசேஷ தருமம் என்றும்.

சாதாரண தருமம் ஆண் பெண் பேதமின்றி அனைவரும் நடைமுறையில் கொண்டுவர வேண்டியது.

விசேஷ தருமம் என்பது ஆண், பெண், கல்யாணமானவர் ஆகாதவர் முதலிய வேற்றுமைகளுக்குதகுந்தபடி பேதமுடையது

Morality is conventional என்று மேல்நாட்டுப் புலவர் ஒருவர் சொல்கிறார். அவர் (Dr. Bernardshaw) சன்மார்க்கம் என்பது பொதுவாக ஒன்று இல்லையென்றும் சூழ்நிலைகளைக் கொண்டு நாம் தாமாக நிர்மாணப்படுத்துவதுதான் என்றும் அபிப்பிராயப்படுகிறார். அது மிகவும் முற்போக்கானது என்றும் அப்படியே நமக்கு அதை ஏற்றுக்கொள்ள முடியுமா என்றும் நான் சந்தேகப்படுகிறேன்.

நமது கலாசாரங்களையும் பண்பாடுகளையும் சுட்டிக்காட்டும் அரிய நூல்களில் சாதாரண தர்மமாகக் காணும் சிலவற்றைக் குறிப்பிடுகிறேன். அதற்கு முன்னால் ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். இந்த தர்ம விஷயத்தில் அதாவது நீதி விஷயத்தில் வடநாடு தென்னாடு என்ற வேற்றுமை இல்லை யென்றும் ஒவ்வொரு காலங்களில் நமது பரந்த நாட்டின் ஒவ்வொரு பகுதியில் ஒவ்வொரு பாஷையில் நூல்கள் இயற்றப் பெற்றன என்றும் சொல்லுவது மிகையாகாது.

மனுஸ்மிருதி, யாக்ஞவல்கிய ஸ்மிருதி முதலிய ஸ்மிருதி களிலும் ராமாயணம் பாரதம் முதலிய இதிஹாசங்களிலும் ஸம்ஸ்கிருத பாஷையில் காணும் அதே கருத்துக்களைத் தமிழின் நீதி நூல்களாகிய ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், வாக் குண்டாம், நல்வழி முதலிய அரிய நூல்களில் நாம் காண் கிறோம்.

உதாரணமாக,

धर्मं चर - அறஞ்செய விரும்பு. தருமத்தைச் செய்வதற்கு ஆசைப்படுவாய்.

सत्यं वद - உண்மையைக் கூறு. கண்டொன்று சொல்லேல்! கண்ணால் கண்டதற்கு மாறாகப் பேசாதே, பொய் சாட்சி சொல் லாதே.

कल्याणं कर्म कुर्यात्

நன்மை கடைப்பிடி. நன்மையானவற்றை உறுதியாகப் பிடி.

प्रागुदयात् प्रबुध्येत्

வைகறைத் துயிலெழு. தினந்தோறும் சூரியன் உதிப்பதற்கு முன்பே நீ தூக்கத்தை விட்டு எழுந்திரு.

भगवन्तं अभिध्यायेत्

வையந்தோறும் தெய்வம் தொழு. உலகிலுள்ள எல்லா விடத்திலும் கடவுளை வணங்கு.

मातृदेवो भव पितृदेवो भव

தந்தை தாய்ப் பேண். அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம். தாயும் தந்தையும் முன்பு காணப்பட்ட தெய்வங்களாவார். அவர்களைப் பேணவேண்டும்.

मृदु मधुरं भाषेत्

நயம்பட உரை. கேட்போருக்கு இன்பமுண்டாகும்படிப் பேசு

कृतज्ञतामधिगच्छेत्

நன்றி மறவேல். ஒருவர் செய்த உபகாரத்தை ஒருபோதும் நீ மறக்காதே.

न कस्मैचित् क्रुध्येत्

ஆறுவது சினம். கோபம் தணியத்தகுவதாகும்.

न कस्मैचित् द्रुह्येत

கெடுப்பதொழி. ஒருவருக்குக் கெடுதி செய்வதை நீ ஒழித்து விடு.

न किंचित् परस्वं हरेत

கொள்ளை விரும்பேல். பிறர் பொருளை அபகரிக்காதே.

न लोकमर्यादामति वर्तेत्

ஊருடன் கூடி வாழ். ஊராரோடு நன்மை தின்மைகளில் கலந்து நீ வாழ்வாயாக,

இப்படி அனேகம். எல்லாவற்றையும் ஒன்றாக ஒரு சிறு கட்டுரையில் முடிக்க முடியாது,

விசேஷ தர்மங்களுக்கும் சில உதாரணங்கள் எடுத்துக் காட்டலாம்.

(தொடரும்)

உ

குருவே துணை

தருமபுர ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களது

சீரிய திருமுன்புக்கு

கைமாறில்லாக் கருணையைப் போற்றல்

திரு தி. செ முருகதாச ஐயா

கௌமார மடாலயம், திருவாமாத்தூர்.

திருத்தருமை யாதீனந் தனிலிருபத்
 தைந்தாகத் திகழ்பட் டத்தின்
திருத்தலைமை பெறுங்கயிலைக் குருமணியே!
 தமிழ்நெடு சீரார் சைவக்
குருப்பிரம தேசிகராய் ஆத்திகநன்
 னெறிபேணிக் குலவி ஆட்சி
பெருத்தநலங் குலவிடச்செய் பெருமானே!
 இருசரணம் பெரிதும் போற்றி. 1

வேறு

ஏழாங் கொடிய பிறவிதனை யில்லா தகற்றச் சுந்தரர்சொல்
ஏழாந் திருமா முறைநூலுக் கினிய பொருளை விளக்கியச்சிட்(டு)
ஆழார் வங்கொண் டிடத்தந்த ஆதீனத்தின் பதிப்பினை நல்
ஊழாற் பெற்றேன் முற்றுமுணர்ந் துவக்கப் பரமனருள்
 துணையே. 2

எந்தப் புராணத் தினுக்குமிலா ஏற்றம மைந்த சிறப்புடைய
கந்தப் புராணச் சுருக்கநூல், கவிஞர் தருமை யாதீனச்
சந்தப் புலமைச் சம்பந்த சரணா லயர்தாம் சாற்றுமதைச்
சொந்தக் கனிவி னுலளித்த தூய கருணை மறவேனே. 3

மாயு மாய வாழ்விளிடை மருவுமுலக மக்கள் தமைத்
தோயு மோன வாழ்வமையத் துணையா யமையப் பேரன்பால்
தாயு மானார் பாடல் முற்றும் தகவா யச்சிற் பதித்ததனை
ஏயுமன் பாலளித் தருளும் ஏற்ற மறிந்து மகிழ்வேனே. 4

பன்னிரண்டு திருமுறையும் பதினான் கான சாத்திரமும்
துன்னுங் கருத்தை உரை நடையிற் றொகுத்திட் டினியநடையாக்கி
பொன்னை நிகர்செந் தமிழின்பூம் பொழிலென்ற விருமுயரிய நூல்
தன்னையன்று தரும் பெரிய தயவை என்னாற் சாற்றரிதே. 5

பொன்னா டையினு மிகவுயர்வாய் பொலியுங் கதரா லாயவுடை
முன்னே யுரைத்த நூற்களுடன் முதிரன்பாலீந் திடப்பெற்றேன்
பின்னா ளாகத் தருமைவந்து பண்பார் சமுகங் கண்டுவக்க
என்னா சையினை யருள்கூட்ட ஏற்று மகிழ்ந்தே னினிதாயே. 6

பேரூர் இராமசாமி யன்பர், பிறங்கும் சிரவைச் சுந்தரநற்
சீரூர் அன்பர் உடனாகத் திருவார் சமுகச் சேவைபெற்றேன்
நீரூர் சடையா னருளதனால் நிலவும் ஞானசம் பந்தம்
ஏரூர் வெள்ளி விழாமலருக் கினிய கவிதை உய்த்துளனே. 7

சந்நிதானத் தன்றுரைத்த தகவார் கட்டளைப் படியே
மன்னுஞான சம்பந்தம் மருவும் வெள்ளி விழா மலருக்
கென்னு ளிறைவன் காட்டிவைத்த இந்தக் கவியை யுளத்தோடு
மன்னு முவப்பா லேற்றாசிவ ழங்கப் பெரிதும் வேண்டுவனே. 8

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Swyambunathaswami Devasthanam, Peralam.

திருவையாறு ஸ்ரீ ஐயாறப்பர் வார வழிபாட்டுக் கழகம் ஸ்ரீ அப்பர் தொண்டர்படை அன்பர்கள் 60 பேர் இந்த தேவஸ்தானத்தில் இன்று காலை வழிபாட்டுக்கு வந்தோம். சந்நிதிகள் எல்லாம் மிகவும் நேர்த்தியாகவும் கண்ணுக்கு இனிமையான காட்சியாகவும் இருந்தது. கோயில் எங்கும் துப்புரவாக இருந்தது. இதைப் பரிபாலித்து வரும் தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்துக்கு சைவ உலகம் மிகவும் கடமைப்பட்டுள்ளது.

(Sd.) P. Arunachalam Pillai,
Rtd. Circle Inspector of Police

27—11—65. (Sd.) S. பக்கிரி செட்டியார்.

ஞாயிற்றின் வழிபாடு

கல்வெட்டு ஆராய்ச்சிக் கலைஞர், வித்துவான்,

திரு. வை. சுந்தரேச வாண்டையார்

எல்லாம் வல்ல இறைவன் தனக்கென ஒரு பெயரும் ஒருரு வமும் இல்லான் எனினும், அன்பர்கள் அவனுக்கு ஆயிரந் திருப் பெயரும் திருவுருவமும் அமைத்து வழிபட்டு வருகின்றனர். அங்ஙனம் வழிபடற் கமைத்துக்கொள்ளப் பெறும் திருவுரு வங்கள், பெரும்பான்மையும் கல், மண், பொன், மணி முதலிய வைகளால் ஆயவை.

இங்ஙனம் மனிதன் கைப்பட இயற்றியவையேயன்றி, பலர், மனித முயற்சியால் ஆக்கப் படாதனவும், இறைவன் ஒருவன் உண்மையையும், அவனது வரம்பிலாற்றலையும் மக்கட்குத் தெரித்து நிற்பனவும் மான இயற்கைப் பெரும் பொருள்களையும், அன்னோன் திருமேனியாகப் பாவித்து வழிபடுவர். அவ் வியற்கைப் பெரும் பொருள்களாவன.

> " நிலம் நீர் நெருப்பு உயிர் கால் நீள்விசும்பு நிலாப் பகலோன்
> புலனாய மைந்தன் "
>
> (திருவாசகம்)

என்பவையாம், இவற்றை அட்டமூர்த்தம் என வழங்குவர்.

> " எட்டிசைந்த மூர்த்தியாயிருந்த வாறிதென்னையே "

என்றார் புகலியர் பெருமானும். அட்டமூர்த்தங்களில் ஏனைய வற்றினும் ஞாயிற்றினையே கற்றோரும் மற்றோரும் நம்நாட்டில் பெரும்பாலும் ஒரு பொழுதோ, இருபொழுதோ, முப்பொழுதோ தமக்கியன்ற பொழுது வணங்கிவருதல் கண்கூடு.

இங்ஙனம் ஞாயிற்றின் வழிபாடு மலிந்திருப்பது ஏன் எனில் ஆணவ இருளில் அழுந்திக்கிடக்கும் உயிர்கட்குத் தன் இன் னருள் ஒளி ஈந்து அவ்விருளைப்போக்கி, அறிவு இச்சை செய்கை களைக் கிளப்பி இயக்கும் இறைவனையொப்பப் புறவிருளில் மறை பட்டுக்கிடக்கும் மன்னுயிர்த் தொகைகட்கு, தன் ஒளி ஈந்து,

கண்ணொளி விளக்கி அவற்றின் அறிவு இச்சைச் செயல்களைக் கிளப்புவது ஞாயிறேயாம். இதனாலன்றோ,

" உலக முவப்ப வலனேர்பு திரிதரு
பலர் புகழ் ஞாயிறு கடற்கண்டாங்கு
ஓவற விமைக்கும் சேண்விளங் கவிரொளி "

எனச் செவ்வேற் செம்மலுக்குப் பரிதியை உவமை கூறினர் நக்கீரப் பெருநாவலர். ஞாயிறின்றேல் ஒளியெங்கே? வளியெங்கே? முகிலெங்கே? மழையெங்கே? பயிரெங்கே? உடம்பெங்கே? உணர்வெங்கே? ஒன்றும் இராது. ஆதலாலே ஞாயிற்றைக் கண்கண்ட தெய்வமாகக் கொண்டு மண்ணுலகம் பரவும்.

ஞாயிற்றின் வழிபாடு எக்காலத்தில் நம் தமிழ் நாட்டில் தோன்றியது என அறுதியிட்டு உரைக்கமுடியாது. பல்லாயிர ஆண்டுகட்கு முன்றோன்றிய தொல்காப்பிய நூலுள்,

" கொடிநிலை கந்தழி வள்ளி யென்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றுங்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே "

என்று கூறப்படுவதால் அந்நூல தோன்றுவதற்கு வெகு காலத்திற்கு முன்பே ஞாயிற்றின் வழிபாடு நம் தமிழ்நாட்டில் இருந்திருத்தல் வேண்டுமென்பது துணியப்படும். ஆசிரியர் தொல்காப்பியனார் அகத்திணையுரையில் " சூரியனை எல்லா நிலத்திற்கும் பொதுத் தெய்வமென்று கூறுதலாலும், இறையனார் களவியலுரையில் அதன் ஆசிரியர் தொல்காப்பியனார் " பாலைக்கு நிலம் வேண்டிற்றிலர். வேண்டாமையின் தெய்வமும் வேண்டிற்றிலர், பிறர் பகவதியையும் ஆதித்தனையும் தெய்வம் என்று வேண்டுவர் " எனக் கூறுதலாலும், ஞாயிற்றின் வழிபாடு தொன்று தொட்டதென்பது மேலும் உறுதிபெறும்.

இஃது இங்ஙனமாக முதற் குலோத்துங்க சோழன் காலத்தில் (கி. பி. 1070—1120) தான் ஞாயிற்றின் வழிபாடு நம் தமிழகத்திற்குப் புதிதாகக் கொண்டு வரப்பட்டதென்று 1926-1927 ஆம் ஆண்டைய தென் இந்தியக் கல்வெட்டுத்துறையின்

அறிக்கை ‡கூறுவது பொருந்துவது அன்று என்பதற்கு மேற் கூறியவையே போதிய சான்றும். வேறும் சில கூறுவது பதி னென்றும் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், பன்னிரண்டாம் நூற் றாண்டின் முற்பகுதியிலும் நம் தமிழகத்தை ஆட்சிபுரிந்த முடி மன்னனாகிய முதற்குலோத்துங்கனுக்கு நெடுநாள் முன்னர்த் தோன்றிய நூல்களுள் நற்றிணையில், "பசுங்கதிர்மதியமொடு சுடர்கண்ணாக" என்றும், சிலப்பதிகாரத்தில், "ஞாயிறுபோற்று தும் ஞாயிறு போற்றுதும்" என்றும், அந்நூலுரையில் அடியார்க்கு நல்லார் பாலைக்குத் தெய்வம் "பரிதியஞ் செல்வனும் திகிரியஞ் செல்வியுமெனக் கொள்க" என்றும், திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரத்தில்,

"அருக்கன் பாதநிணைரு வாரந்தியில்
அருக்கனு வனரனுரு வல்லனே"

என்றும் கூறுதலாலும் ஞாயிற்று வழிபாட்டின் தொன்மை விளங்கும்.

சிலப்பதிகாரம் கனுத்திறம் உரைத்த காதையில் "பகல் வாயிலுச்சிக் கிழான் கோட்டம்" என்று ஒரு கோயிற் பெயர்

---

‡Annual report on South Indian Epigraphy for the year 1926-27, Page 79, Page 19. "The temple dedicated to the sun and the attendant planetary deities at Suryanarkoil in Tanjore District owes its existence to Kulothunga I. The Surya temple is an unique one of its kind in South India and it possibly shows the influence of Gahadavala kings of Kannauj who were worshippers of the sun. From the existence of the image of the God Visvesvara with his consort Visalakshi in the temple at Suryanarkoil, it has been inferred that the worship of the sun was introduced from Benares. (Annual report for 1905 Pgragraph 60) In No 229 of 1927 the God is called *குலோத்துங்க சோழ மாத்தாண்டாலய தேவர்*, and in No 231 of 1927 *குலோத்துங்க சோழ மாத்தாண்டாலையத்து சூரியதேவர்* thus combining in one of the name of the orginator of the temple & the worship of the sun newly introduced.

காணப்படுதலாலும் உச்சிக்கிழான் - சூரியன், அன்றி பகல் வாயில் உச்சிக்கிழான் - பகற்பொழுதுக்கு வழியான உச்சிக் கிழான் என்றுமாம் என்றும், கீழ்த்திசையில் தோன்றுகின்ற சூரியன் கோயில் என்றும், முறையே அரும்பத உரையாசிரியரும் அடியார்க்கு நல்லாரும் உரை கூறுவதாலும், முதலாங்குலோத் துங்கனுக்குப் பல நூற்றுண்டுகட்கு முன்னரே ஞாயிற்றுக்குக் கோயிலும் நம் நாட்டில் உண்டு என்பது பெறுதும்.

மேற் காட்டிப் போந்தவாறு, ஞாயிற்றின் வழிபாடு நம் தமிழகத்தில் தொன்று தொட்டுள்ளது என்பதும், முதலாங் குலோத்துங்கன் காலத்தில் தான் அவ்வழிபாடு நம் தமிழ கத்திற்குப் புதிதாகக் கொண்டுவரப்பட்டதென்று 1926—27 ஆம் ஆண்டையக் கல்வெட்டுத் துறையின் அறிக்கை கூறுவது பொருத்தமில்லை என்பதும் வெள்ளிடை மலைபோல் விளங்கு வதாகும். மேலும், சூரியனார்கோயிலிலுள்ள சூரியதேவர்க்குக் "குலோத்துங்க சோழ மார்த்தாண்டாலயத்து சூரியதேவர் எனப் பெயர் உண்டென்று அக் கோயில் கல்வெட்டுக்கள் உணர்த்துவதுகொண்டு, அக் கோயில் முதற் குலோத்துங்க மன்னனல் கட்டப்பட்டு அதற்கு அவன் பெயர் வைக்கப்பட்டது என்று கொள்வதே பொருத்தமுடையதாகும்.

குமரகுருபரன் — ஆண்டுச் சந்தா 3 — 00 —

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல் வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலிய வற்றை எளிய நடையில் தெளியச்செய்யும் ஆராய்ச்சி விளக்கத்துடன் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்க ளது ஆணையின்வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவரு கிறது.

விலாசம் : நிர்வாக ஆசிரியர், உயர்திருவாளர்.

T. M. குமரகுருபரன் பிள்ளை B. A.. B. L., அவர்கள்

"குமரகுருபரன்" ஆபீஸ் ஸ்ரீவைகுண்டம்.

"ஞானசம்பந்தம்"

வெள்ளிவிழா மலர் வாழ்த்துச் செய்தி

Smt. MARAGATHAMCHANDRASEKAR
Deputy Minister of Social Security, India Government.

I am very glad that "Gnanasambandam" will be completing 24 successful years and will be celeberating its Silver Jubilee on 10th December 1965. The very useful and excellent service rendered by the Dharmapuram Adhinam in general and by "The Gnanasambandam" in particular is very heartening. It is indeed an excellent organ to popularise the religious and other literary Tamil masterpieces I wish "The Gnanasambandam" continued success.

பாராட்டுரைகள் ;-

Shri Meikandar Siddhanta Sabha,
Kumbakonam.

We are very glad to know that the monthly journal of the Dharmapuram Adhinam, "Gnanasambandam" has completed twenty-five years of its circulation and that a Silver Jubilee issue is being brought out.

The Silver Jubilee issue is very nice and will prove very useful and educative to the public. The author has not spared any pains to make the work attractive, informative and high useful, We wish the book and wide circulation among the public.

திரு. மு. இராமலிங்கம் பிள்ளை

நாட்டுச்சின்னப்பண்ணை, காட்டுமன்னார்கோயில்.

ஞானசம்பந்தம் வெள்ளி விழா மலரைப் பெரிதும் மனமார பாராட்டி வரவேற்கிறேன். அது சமயம் பல முக்கிய ஜோலிகள் சந்தர்ப்பமாயிருந்தும் அவைகளில் மனம் நாடாது மலரின்கண்

பதிந்து உள்புகுந்து பார்க்கவே தூண்டி நின்றது. திருக கைலாய பரம்பரையின் விசேஷ விபரத்தைத்தெளிவு படுத்தும் விபரங்கள் காணப் பெரிதும் மலரை மண்டியிட்டு வரவேற்கிறேன். சரியான விபரம் கண்டேன். பலர் இதைப் பார்த்ததும் மலரைப் பாராட்டாமலிருக்க முடியாது என்பதுதெளிவு. சரியான விபரம் தெரிந்துக்கொள்ளாத சில முக்கிய நண்பர்கள் - தெரிந்ததாகச் சொல்லி வந்தவர்கள் இன்று மலரினுல் தெரிந்துக்கொள்ள வாய்ப்பாகிறது.

நந்தனுர் அவதரித்த ஆதனூர் சம்பந்தமான நீண்ட நாள் பெரிய பிரச்சினை இந்த மலரினுல் தீர்வு அடையப்பட்டு விட்டது. பல அன்பர்கள் அனுமானமாய் உள்ளது போல் சொல்லிவந்ததை, உண்மையான விபரம் சரியான ஆதாரத்துடன் வெளிவந்துள்ள மலர் தெளிவு படுத்தியிருக்கிறது.

திரு. P. A. ராஜு செட்டியார்
கோயம்புத்தூர்.

ஞானசம்பந்தம் வெள்ளிவிழாமலர் வந்துசேர்ந்தது, மிக்க மகிழ்ச்சி. எனதுமனமார்ந்த வந்தனங்களையும் வணக்கங்களையும் திருமுன் சமர்ப்பிக்கின்றேன். நான்நேரில் வந்து தரிசித்து ஆசிபெறும் வாய்ப்பில்லாவிடினும் ஆசி எனக்கு எப்போதும் உறுதுணையாய் நின்று அருளுமென நம்புகின்றேன். மாதா மாதம் வரும் ஆதீன வெளியீடும் எனக்குப் பெரும் பேற்றையும் ஆசிகளையும் அருளுகிறது,

திரு. தி. செ. முருகதாச ஐயா,
கௌமார மடாலயம். திருவாமாத்தூர்.

திருஞான சம்பந்தர் திருநெறிய தமிழ்மறையாற்
 செகமுய் வித்தார்
வருஞான பானுவாய்த் தருமையா
 தீனத்தை வயக்கு மூர்த்தி
குருஞான சம்பந்தர் சிவபோக
 சாரமுதற் கூறித் தந்தார்
பெருஞானத் தம்மரபில் இருபத்தைந்
 தாம்பட்டம் பிறங்கும் அண்ணல்.

விண்ணகத்தி லொளியிருபத் தேழாம்
 உடுக்களொப்ப விமலன் கோயில்
மண்ணகத்தி லிருபத் தேழினைப்புரந் திட்
 டெழில்மின்ன மாண்பு செய்வார்,

உண்ணமுதொப் பெனும்''ஞான சம்பந்த''
மாதவிதழ் உதவு மிந்நாள்
வண்ணமொரு மூன்றவிர்ஓ வியவடிவம்
பலசிறக்கும் வண்ண மாக. 2

முகப்பினிலம் பலக்கூத்தன் அம்மையுருப்
பொன்வண்ண முயங்கச் சேர்த்துத்
தகப்பலவாம் பெரும்புலவர் கட்டுரை,வாழ்த்(து)
ஆசியுரை, சாரு மாறு
உகப்பொளிர ''ஞானசம்பந் தம்''கொளிரு
பத்தைந்தாண் டொளிரு மிந்நாள்
குகப்பரம னருள்கூடி வெள்ளிவிழா
மலர்நமக்குக் கொடுத்தார் அம்மா. 3

வெண்பா

தருமையா தீனந் தழைக்குமணி, கைலைக்
குருமணி,நற் செந்தமிழ்ச்சீர் கூடும் — பெருமைமணி,
பன்னிருபத் தைந்தாய பட்டத் திலங்குமணி,
மன்னியமெய்ச் சைவ மணி.

திரு. ரா. சண்முகசுந்தரம்

அப்பர் இல்லம், பண்ணுருட்டி.

''ஞானசம்பந்தம் வெள்ளி விழா மலர்'' கிடைக்கப் பெற்றேன். சிறந்த புலவர்களும் ஆராய்ச்சியாளர்களும் எழுதிய கட்டுரைகள் மிகுதியும் விரும்பத்தக்கனவாயுள. நம்பியாண்டார்நம்பிகள் திருஞானசம்பந்தப் பெருமானைப் ''பத்தித் தனித் தெய்பம் பார்வாழத்தந்தபிரான்'' எனப் போற்றுகின்றனர். அங்ஙனமே, 'ஞானசம்பந்தம்' பக்தியை வளர்க்கும் பான்மையதாகவே ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் பார்வையால் பணி செய்து வருகிறது. அவ்விதழ் பல்லாண்டு ஓங்கி வளர்கவென அதிகைப் பெருமான் அருள்பாலிப்பாரைக.

திரு. ஆ. சிவலிங்க முதலியார்

தமிழ்ப்பேராசிரியர், மயிலம்.

திருவாரும் தமிழ்ஞான சம்பந்தப்
பெயருடனே சிறந்த மாத
ஒருவாரும் இதழ்வெள்ளி விழாமலரை
அடியேனுக் குவந்த ளித்த
பெருஞான மமர்கயிலைக் குருமணிதன்
திருவடியின் பெருமை யெண்ணி
ஒருஞான மில்லாதேன் தொழுதுவழி
படலன்றி யுரைப்ப தென்னே.

திரு. கு. சுந்தரமூர்த்தி

தமிழ்ப்பேராசிரியர், திருப்பனந்தாள்.

ஞானசம்பந்த வெள்ளி விழா மலரை ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமூர்த்திகளின் திருக்கைவழக்கமாகப் பெற்றுப் பெரிதும் மகிழ்ந்தேன். 'எளியர் எங்குளார் என்று தேர்ந்து தேர்ந்து நின்று அளியராகுதல் நின் அருளின்வண்ணமே, என்னும் அருள்மொழி அனுபவமொழியாயிற்று.

அடியேனை யொத்த சிற்றுயிர்களுக்கும், 'காலம்பாராது கருத்தினை யளவாது சீலம் நோக்காது தீக்குணம்கொள்ளாது ஞானசம்பந்தத்தைத் திருக்கைவழக்கமாக வாரிவாரி வழங்கியருளும் வள்ளன்மைக்குச் சைவவுலகம் என்னுற்றுங்கொல்லோ? ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமூர்த்திகளின் திருவடிமலர்களை நினைந்து நினைந்து வழிபடல் அல்லது யாதுசெய்ய இயலும்!

ஞானசம்பந்தத் திருவிதழில் வழக்கமாக வழங்கியருளும் அருளுரை முதற்கண் அணிசெய்வதுடன், பதினுறு இடங்களில் குருமூர்த்திகளின் பொன்மொழிகள் சிவமணங்கமழ்ந்து அணி செய்கின்றன. ஞானசம்பந்தத் திருவிதழ் என்றும் பதினுருய் நின்று நிலவ, இதுவும் திருவருட்குறிப்பாய் விளைந்த தொன்று என்றே அடியேன் நினைக்கின்றேன்.

வாழ்க ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணியவர்கள்!
வளர்க ஞானசம்பந்தம்!

தருமையாதினத் தமிழ்ப் புலவர்

வை. குஞ்சிதபாதம் பிள்ளை

சென்னை

நம் கயிலையாதினத்தில் மலர்ந்த ஞானசம்பந்த வெள்ளி விழா மலர் அடியேன் கிடைக்கப்பெற்றேன். அடியேன் அதனை முதலிலிருந்து முற்றும் படித்து முடித்தேன். சுருங்கக்கூறுமிடத்து அத்தனை கட்டுரைகளுமடங்கிய மலர் அனைத்திலும்பு உள்நெக ஆனந்தத்தேன் சொரிவதாக விளங்குகிறது.

அம் மலரில் ஆங்காங்கே ஒளி வீசிக் கொண்டிருக்கும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் அருளுரைகள் உண்மை ஞானத்தை ஊட்டுவனவாக உள்ளன, அவ்வருளுரையே எனக்குப் போதும். வேறு சித்தாந்த சாத்திரம் படிக்க வேண்டியதில்லை என்று எனக்குத் தோன்றுகிறது, ஸ்ரீ இராம கிருட்டினபரமஅம்சர் அருளுரைகளைத் தொகுத்திருப்பது போல் இவற்றை நூலாகத் தொகுக்க வேண்டுமென்கிற ஆவல் எனக்கு உண்டாயிற்று.

தருமை ஆதீனம் வேளூர் தேவஸ்தானம்

இலவச சித்த வைத்தியசாலை,

வைத்தீஸ்வரன்கோயில்.

பஞ்சரத்தின ரசாயனம்.

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது — பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கை யான்பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

இப்பாடல் விநாயகப் பெருமானை துதித்து வணங்கக்கூடிய பக்திப்பாடல். இது தெய்வப் புலவர் ஔவையார் அவர்களால் பாடப்பட்டது. அழகிய திருமேனியையுடைய விநாயகப்பெருமானின் திருவடித்தாமரைகளை அடைந்தவர்கள், அவனுடைய அருள்வாக்கும், எல்லா உயிர்களும் இன்புற்றிருக்க வேண்டும் என்று நினைக்கின்ற ஒருமைப் பாடுடைய மனமும், பார்வையில் லக்ஷ்மி கடாக்ஷமும் உண்டாகும் என்று பெரும்பாலோரும் பொருள் கொள்வார்கள்.

ஆனால் ஔவையார் தெய்வப் புலவராகையால். இதில் ஒரு சிறந்த கற்பத்தைக் கூறியிருக்கின்றார். கற்பம் உண்டால் வாத, பித்த, சிலேத்துமங்கள் தன்நிலையில் இயங்கிவரும். உடலுக்கு நோய்களால் துன்பம் அணுகாது. ஆகையால் மனம் தியானத்தில் நிலைக்கும். மனம் தியானத்தில் நிலைத்தால் ஆண்டவன் அருளை வெகு எளிதில் அடையலாம் மானிடர்களாகிய நமக்கு எளிதில் கிடைக்கக் கூடிய கற்பத்தைக் கூறியிருக்கின்றார்.

அதாவது, திருமேனி - மேன்மை பொருந்திய குப்பைமேனி, தும்பி - மிகச்சிறந்த கவுதும்பை (தும்பி என்ற ஒரு மூலிகையும் உளது) கையான் - பொற்றலைக் கையான்தகரை (மஞ்சள் பூ உடைய கரிசலாங்கண்ணி) பாதம்-சிறுசிருப்படைச் சமூலம் (சிறு செருபுள்ளடி என்றும் பெயர்) பூக்கொண்டு-வெண்தாமரைப் பூ இதழ்களைக்கொண்டு; தப்பாமற் சார்வார் தமக்கு - தப்பிதமில்லாமல் கற்ப முறைப்படி கூட்டி, துப்பார் - உண்கின்றவர்களுக்கு; வாக்குண்டாம் - அருள்வாக்கு உண்டாகும்; நல்ல மனமுண்டாம் – காமவெகுளி மயக்கங்களற்றதூய மனமுண்டாகும்; மாமலராள் நோக்குண்டாம் – தன் அருட்பார்வையில் லக்ஷ்மி கடாக்ஷமும் உண்டாகும்; மேனி நுடங்காது - இச்சரீரம் நரைதிரை, மூப்பு அகலும். வெகுகாலம் வாழக்கூடிய திடமான சரீரத்தைப் பெற்று சரியை, கிரியை, யோகத்தால் பிரணவ தேகத்தைப் பெற்று ஓங்கார மூர்த்தியின் திருவடிப் பாதங்களை அடைவார்கள் என்பதாம்.

செய்திகள்

தருமையாதீனத்தில் குருபூஜை விழா

விசுவாவசு௵ மார்கழி௴ 25௳ (9—1—66) ஞாயிற்றுக் கிழமையன்று திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமையாதீனம் இரண்டாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவச தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை விழா நடைபெற்றது. காலை மாலை இருவேளைகளிலும் குருமூர்த்தத்தின் ஆலயத்தில் விசேஷ அபிஷேக ஆராதனைகள் சிறந்த முறையில் நடைபெற்றன. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் இருவேளைகளிலும் குருமூர்த்தத்திற்கு எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கியருளினார்கள். குருபூஜை விழா மலராக "கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி" வெளியிடப்பெற்று, அன்பர்கட்கு வழங்கப்பெற்றது.

காலை 7-30 மணி முதல் சொற்பொழிவுகள் தொடங்கப் பெற்றன. வித்துவான். ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் "திருவிளையாடற் புராணம்", வித்துவான். திரு. சி. அருணைவடிவேல் முதலியார். "விநாயக புராணம், பெரிய புராணம்", வித்துவான். திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ., "கந்தபுராணம்", வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் "காஞ்சிப் புராணம்", சிரோமணி, வித்துவான். திரு. வி. சபேசன் "குற்றாலத் தல புராணம்", சிரோமணி. பிர்மஸ்ரீ, கே. ராஜகோபால சாஸ்திரிகள் "ஆச்சாள்புரத் தலபுராணம்". திரு. ஆர். வேலாயுத ஓதுவார் "திருத்துருத்திப் புராணம்", திரு. சம்பந்த ஓதுவார் "கோயிற் புராணம்" முதலிய தலைப்புக்களில் சொற்பொழிவாற்றினர்.

திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேஸ்வரசுவாமி தேவஸ்தானத்திற்கு அகில இந்திய காங்கிரஸ் மகாசபைத் தலைவர்,

கனம். திரு. K. காமராஜ் அவர்கள் வருகை

23—11—65 செவ்வாய்க்கிழமை மாலை 4-மணி அளவில் தஞ்சை அறநிலையத்துணை ஆணையர் திரு. A. மார்க்கண்டவேல் ராஜன் அவர்கள் வருகை புரிந்தார்கள். இரவு 8 மணி அளவில்

காங்கிரஸ் தலைவர் திரு. K. காமராஜ் அவர்களும், மத்திய அரசாங்க அமைச்சர், கனம். மரகதம் சந்திரசேகர் அவர்களும், சென்னை மாநில அமைச்சர்கள் கனம். திரு. பூவராகன் அவர்களும், கனம் திரு. வெங்கட்ராமன் அவர்களும் வருகை புரிந்தார்கள். தஞ்சை மாவட்டத் தண்டல் நாயகம திரு. வேதநாராயணன் அவர்களும் உடன் வந்திருந்தார்கள்.

திருக்கோயில் திருமுன்னர் பூர்ணகும்பம் முதலிய கோயில் மரியாதைகள் செய்து வரவேற்பு அளிக்கப்பட்டது. சந்நிதிகள் தோறும் சிறந்த முறையில் தரிசனம் செய்துவைக்கப்பட்டது ஸ்ரீ காலசம்ஹாரமூர்த்தி சந்நிதியில் தங்கப்பத்திரம் வாங்குவதற்கு, ஆதீன தேவஸ்தானங்கள் சார்பில் தங்கம் கொடுக்கப்பட்டது. பிராகாரத்தில் வரையப்பெற்றுள்ள வரலாற்று ஓவியங்களையும், திருப்பதிகக் கல்வெட்டுக்களையும் கண்டு மகிழ்ந்தார்கள்.

தருமையாதீஸ்தாபனங்கள் சார்பில் மாயூரம் - வள்ளலார்கோயிலில்

பாவைமாநாடு

திருத்தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் அருளாணைப்படி தருமையாதீஸ்தாபனங்கள் சார்பில் மாயூரம் - வள்ளலார்கோயிலில் 23, 24, 25, 26—12—65 ஆகிய நான்கு நாட்களிலும் பாவை மாநாடு சிறப்பாக நடைபெற்றது.

வள்ளலார்கோயில் இந்நான்கு நாட்களிலும் அழகுறக் காட்சி வழங்கியது. வளைவுத் தட்டிகளாலும் ஆலவட்டம் தோரணம் முதலியவற்றாலும் கோயில் முன்புறம் அலங்கரிக்கப்பெற்றிருந்தது. மாநாட்டுப் பந்தல் சிறப்புற விளங்கியது. தனி மின்சார விளக்குகள் பொருத்தப்பெற்று ஒலிபெருக்கி வசதிகளோடு பொது மக்கள் பலரும் கேட்டு மகிழும் வண்ணம் மாநாட்டுப் பந்தல் விளங்கியது.

25—12—65 குருவாரம். தென்முகக் கடவுளின் திருநாள். பெருமான் தங்கக் கவசம் பூண்டு அன்பர்க்கு அருட் காட்சி வழங்கினர். மாலை 5 மணிக்குத் திருமுறைப் பாராயணம் தொடங்கப் பெற்றது. திருமுறைச் சுவடிகள் வெள்ளி விமானத்தில் விழாப் பந்தலில் எழுந்தருளுவிக்கப் பெற்றிருந்தன. மாலை 6 மணிக்குத் திருமுறை வழிபாட்டோடு மாநாடு தொடங்கியது.

வேளூர் தேவஸ்தானம் கட்டளை விசாரணை வித்துவான், ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அனைவரையும் வரவேற்று உரை நிகழ்த்தினார்கள்.

அண்ணாமலைப் பல்கலைக் கழக மொழியியல் துறைப் பேராசிரியர், பல்கலைச்செல்வர், திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை M.A., B.L., M.O.L., அவர்கள் பாவை நோன்பு பற்றி விரிவுரையாற்றினார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழக மொழியியல் துறையில் பட்டப் பயிற்சி பெறும் செஞ்சொற்கொண்டல், வித்துவான். திரு. சொ. சிங்காரவேலன் M.A.. அவர்கள் என்ன குறை என்ற தலைப்பிலும், தருமையாதினப் பல்கலைக் கல்லூரிப் பொறுப்புமுதல்வர், திருமுறைச்செம்மல், வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள் திருவாசகம் பற்றியும் விரிவுரையாற்றினர். சீகாழி தேவஸ்தானம் திருமுறை வகுப்பு ஆசிரியர் திரு. S. திருஞானசம்பந்தம் அவர்களும், வேளூர் தேவஸ்தானம் திருமுறை வகுப்பு ஆசிரியர் திரு. K. சொக்கலிங்கம் அவர்களும் திருமுறை இன்னிசை அரங்கு நிகழ்த்தினர்.

24—12—65 வெள்ளிக்கிழமை. அன்று திருவிளக்கு வழிபாடு சிறப்பு நிகழ்ச்சியாக நடைபெற்றது. 108 குத்துவிளக்குகள் இரண்டு வரிசையாக அமைக்கப்பெற்றிருந்தன. நிவேதனப் பொருள்களும் அர்ச்சனைப் பொருள்களும் வைக்கப்பெற்றிருந்தன. ஒருவரிசையின் முன்பின் இருபுறங்களிலும் பெண்மக்களும் மற்றொரு வரிசையின் இருபுறங்களிலும் ஆண்மக்களுமாக இருந்து, தருமையாதின வேத சிவாகம பாடசாலைத் தலைமையாசிரியர் சிவஸ்ரீ. S. சுவாமிநாத சிவாசாரியார் அவர்கள் சகஸ்ர நாமார்ச்சனை சொல்ல முறையே ஒவ்வொருவரும் திருவிளக்கை அர்ச்சித்து வழிபட்டனர். பின்னர் திருமுறை அர்ச்சனை நடைபெற்றது. இவ்வழிபாட்டில் அன்பர்கள் ஆர்வத்தோடு கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் தஞ்சை அறநிலயத்துறைத் துணை ஆணையர் திரு. A. மார்க்கண்டவேல்ராஜன் அவர்கள் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

மாலை 6-30 மணிக்கு மாநாடு தொடங்கப்பெற்றது. தஞ்சை இந்து சமய அறநிலயத் துறைத் துணை ஆணையர் திரு. A. மார்க்கண்டவேல்ராஜன் அவர்கள் சிறப்புரை வழங்கினார்கள். முதலில் அவர்கள் பக்திப் பாடல்களைப்பாடி அன்பர்கள் அனைவரையும் ஓதச் செய்து இன்புறுத்தியது குறிப்பிடத்தக்கது. சென்னைப் பன்மொழிப்புலவர் திரு. கா. அப்பாத்துரை M. A., அவர்கள் 'ஏதவனைப் பாடும்பரிசு' என்ற தலைப்பிலும், திருவாசக

மணி, திரு. K. M. பாலசுப்பிரமணியம் B. A., B. L., அவர்கள் ‘ அரசும் கன்றும் ’ என்ற தலைப்பிலும், குகஸ்ரீ. ரசபதி அவர்கள் ஏழைபங்கில் உள்ள எம்மான் என்ற பொருளிலும் விரிவுரை நிகழ்த்தினர்.

தருமையாதீனப்புலவர், வித்துவான், திரு. வை. மு. சண்முக தேசிகர் அவர்கள் குழுவினரின் “ மாணிக்கவாசகர் ” சத்கதா காலக்ஷேபம் நடைபெற்றது.

25—12—65 சனிக்கிழமை. அன்று மாலை 6 மணிக்கு மாநாடு தொடங்கப்பெற்றது. சென்னை “ திருக்கோயில் ” ஆசிரியர் சித்தாந்தப்புலவர்மணி, திரு. N. R. முருகவேள் M. A., அவர்கள் ‘திருவெம்பாவைச் சிறப்புப்’பற்றியும், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர், தருமையாதீனப்புலவர், வித்துவான், திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் ‘ கண்ணுக்கு இனியான் ’ என்ற தலைப்பிலும், செந்தமிழ் வித்தகர், திரு. அ. ச. ஞானசம்பந்தம் M. A., அவர்கள் ‘ கேட்டறியோம் கண்டறிவாரை ’ என்ற தலைப்பிலும், பைந்தமிழ்ச்செல்வர், திரு. ச. சிவகுமாரன் M. A., அவர்கள் ‘எங்கெழிலென் ஞாயிறு’ என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினர்.

இரவு 9 மணிக்கு மதுரை திருமதி. இராஜம்மாள் சுந்தர ராஜன் அவர்கள் குழுவினரின் நாடகம் நடைபெற்றது.

26—12—65 ஞாயிற்றுக்கிழமை மாலைமணி 6-15க்கு மாநாடு தொடங்கப்பெற்றது. ஆதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் சிரோமணி வித்துவான் திரு, V. சபேசன் திருச் சதகம் பற்றியும், ஆதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியை வித்துவான் திருமதி. ப. நீலா அவர்கள் திருப் பள்ளியெழுச்சி பற்றியும், கல்லிடைக்குறிச்சி பிரம்மஸ்ரீ. K. S. இராமகிருஷ்ண சாஸ்திரிகள் திருப்பாவை பற்றியும், திருமதி. சௌந்தராகைலாசம் அவர்கள் மார்கழி நீராடலும் மகளிரும் என்ற தலைப்பிலும் விரிவுரை நிகழ்த்தினர்.

இரவு 9-மணிக்கு பண்ணிசை வாணர்களின் பண்ணிசை முழக்கோடு திருமுறை வீதி உலா நடைபெற்றது.

நான்கு நாட்களிலும், ஆயிரக்கணக்கான அன்பர்கள் பலர் மாநாட்டு நிகழ்ச்சிகளைக் கண்டும் கேட்டும் களிப்புற்றனர்.

ஏனைய தேவஸ்தானங்களில் நிகழ்ந்த பாவை மாநாட்டு நிகழ்ச்சிகள் அடுத்த இதழில் வெளிவரும்.

எதிர்காலம் - திரு. கே. முத்துஜோதிடர்

(விசுவாவசுஸு தைமீ 1௳ முதல் 29௳ முடிய)
(14—1—66 முதல் 11—2—66 முடிய)

விசுவாவசு வருஷம் ஸ்ரீ சிவபெருமான் திருவருளால் தை மாதம் முதல் தேதி சுக்ரவாரம் கிருஷ்ணபக்ஷம் அஷ்டமியும் சித்திரை நக்ஷத்திரம் இரண்டாம்பாதமும், அருணோதய காலம் தனூர் லக்னமும் கூடிய சுபவேளையில் சந்திரகேந்திர பிருஹஸ்பதி அமைந்து இருக்கும் சமயத்தில் ஸ்ரீ சூரியபகவான் தனூர் ராசியிலிருந்து மகர ராசிக்கு உத்திராயண பிரவேசம், செய்கிற சுப பலத்தால் உலகமெங்கும், சுபிக்ஷமும், அமைதியும், சாந்தியும், ஆரோக்யமும், உண்டாகி ஒவ்வொரு மக்களும், சந்தோஷத்துடன்; பொங்கலோ பொங்கல் என்று வாழ்த்திக்கொண்டு பால் பொங்கச் செய்து ஸ்ரீ சூரியபகவானுக்கும் இஷ்ட தேவதைகளுக்கும் நிவேதனத்துடன் நீராஜனமும் செய்வித்து, பரம சந்தோஷத்துடன் சங்கிராந்தி பூஜை நடக்க ஸ்ரீ பகவானை பிரார்த்திப்போமாக.

1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும், சுபசோபனாதி மங்கள காரியங்களுடனும், தனதான்ய சமிருத்திகளுடனும், பந்துமித்ராளுடைய சேர்க்கையுடனும், ஆரோக்யத்துடனும், நடந்துகொண்டு, சகல காரியங்களையும் ஜெயிக்கச் செய்யும். மனம் சாந்தி அடையும். சனி, செவ்வாய் சுபமாகும்.

2. ரிஷபம். கார்த்திகை ¾ - ரோஹிணி - மிருகசீரிஷம் ½

கார்த்திகை 2, 3, 4 பாதங்களும், ரோகிணி நான்கு பாதங்களும், மிச்ரபலனைத்தரும். குடும்பத்தில் சுப விரயங்களும், தேவ காரியங்களும், அடிக்கடி சஞ்சார பலன்களும் ஏற்படச்செய்யும்; மத்தியில் எதிர்பாராத சில்லரையான நஷ்டங்களும் காட்டும், சத்ருவை சரணடையச் செய்யும்; மிருகசிர்ஷம் 1, 2 பாதங்களும் பூர்ண சுபத்தையும் வியவகார வெற்றியையும் தரும். நஷ்டதனம் தானாக வந்துசேரும். செவ்வாய், புதன் சுபமாகும்.

3. மிதுனம். மிருகசீரிஷம் $\frac{1}{2}$ - திருவாதிரை - புனர்பூசம் $\frac{3}{4}$

மிதுனராசி 9 பாதங்களும் சுபமாகவே நடக்கச்செய்யும். ஆனால் தனதான்ய விருத்தியில் குறைகாட்டும். சதா அலைச்சலைத் தரும். வைத்தியச்செலவு அதிகமாகும். கிராம பூமிகளில் விசேஷ லாபம் இருக்காது. சனி, ஞாயிறு சுபமாகும்.

4. கடகம். புனர்பூசம் $\frac{1}{4}$ - பூசம் - ஆயில்யம்.

கடகராசி 9 பாதங்களும் சுபத்தையும் ஜெயத்தையும் தரும். வித்யா விருத்தியாகும். தெய்வீகமான காரியங்கள் அடிக்கடி, நடந்து மனதிற்கு சந்தோஷத்தையும் சாந்தியையும் தரும். வியவகாரம் ஜெயிக்கும், வெகுநாளாகப் பிரிந்து இருந்தவர்கள் தானாக வந்துசேருவார்கள். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

சிம்மராசி 9 பாதங்களும் சுப சந்தோஷங்களை உண்டு பண்ணும். ஆரோக்யம் உண்டாகும். தொழில் ஓங்கும், மேலோர் பெரியோர்களின் அன்பினால் அனேக காரியங்கள் சுலபசாத்யமாகும். புதன், வியாழன் சுபமாகும்.

6. கன்னி. உத்திரம் $\frac{3}{4}$ - ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

கன்னியாராசி 9 பாதங்களும், தனதான்ய சமிருத்தியுடனும் சம்பூரணமான தெய்வபலத்துடனும். பிரகாசித்துக்கொண்டு எங்கும் பிரசித்தியைத்தரும். அசாத்யமெல்லாம் சுலபசாத்ய மாகும். தெய்வபலம் முன்னிற்கும்; ஸ்தாவர ஜங்கம சொத்துக் களில் அனேகம் மாறுதல்களும், வித்யா விருத்தியும், கீர்த்தி பத்திரங்களும் கிடைக்கச்செய்யும். வரவு செலவு சமனாகும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

7. துலாம். சித்திரை $\frac{1}{2}$, - சுவாதி - விசாகம் $\frac{3}{4}$.

துலாராசி 9 பாதங்களும், எதிர்பாராத லாபங்களைத் தந்து உலகில் மகத்தான கீர்த்தியையும் உண்டுபண்ணும், அசாத்ய மெல்லாம் சுலப சாத்தியமாகும். மேலோர் பெரியோர்களின் அன்பும் தெய்வபலமும் முன்னிற்கும். கிரக சுகம் ஓங்கும். ஆரோக்யம் உண்டாகும். புதன், வியாழன் சுபமாகும்.

8. விருச்சிகம். விசாகம் $\frac{1}{4}$-அனுஷம்-கேட்டை

விருச்சிகராசி 9 பாதங்களும், ஜீவனவிருத்தியைத்தரும் குடும்பத்தை நிலைக்கச்செய்யும்; களத்திரபுத்திராதிகளால்

சுகம் உண்டுபண்ணும். விவாகாதி சுபங்களும் ஏற்படும். ஸ்தாவர ஜங்க சொத்துக்கள் சேரும். சனி, செவ்வாய் சுபமாகும்.

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர்ராசி 9 பாதங்களும் புத்திராதிகளால் மேலோங்கச் செய்யும். நூதன வஸ்திராபரண சேர்க்கை ஏற்படும். வித்யா விருத்தியாகும். நூதன கட்டிடங்கள் அமையும், கிராமபூமிகள் செழிக்கும். திங்கள், புதன் சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகரராசி 9 பாதங்களும் ராஜாங்க மூலமாய் கீர்த்திப் பத்திரம் கிடைக்கச்செய்யும். உத்தியோகம் ஓங்கும்; களத்திர புத்திராதிகளால் இல்லற சுகம் நீடிக்கும். நூதன பிரபு தரிசனமும், சகமித்ர பிராப்தியும் ஏற்படச்செய்யும். ஆரோக்யம் உண்டாகும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

11. கும்பம் - அவிட்டம் ½, சதயம் - பூரட்டாதி ¾.

கும்பராசி பாதங்களும் கிரகசுகத்தை விசேஷமாய்த் தரும். தேவதாகுரு தரிசனமும், இடம் மாறுதலும் உண்டுபண்ணும். வியாதி, சத்ருபயம் நீங்கும். ஸ்திர சுகவாசம் ஏற்படச்செய்யும். தெய்வம் காக்கும். ஞாயிறு, புதன் சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி ½ உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் மகத்தான கீர்த்தியை உண்டு பண்ணும். சுபவிரயங்களும், தேவதா குருகுலத்தால் அசாத்ய மெல்லாம் சுலப சாத்யமாகவும் ஆகச்செய்யும், தொழில் ஓங்கும். புத்திராதிகளால் சுகம் உண்டாகும். ஞாயிறு, செவ்வாய் சுபமாகும்.

குறிப்பு :- உத்திராயண பிரவேச காலம் உலகத்துக்கு எல்லாம் விசேஷ சௌக்கியத்தைச் செய்வதாக இருந்தாலும் இவ்வருஷத்திய ராஜா சுக்ரனுக்கு மேற்படி மாதத்தில் வக்ராஸ்தமனமும் குருவுக்கு வக்ரமும், கும்பராசியில் சனி, செவ்வாய் சேர்க்கையும் ஏற்படுகிறபடியால். விந்தியோத்தர தேசங்களிலும் தக்ஷிண பச்சிம சமுத்திர தீரங்களிலும் அனேக மாறுதல்களும், மகாஜனங்களுக்கு சுகக்குறைவும் அமைதி பங்கமும், யுத்த பயமும் பற்றுக்குறைவும் காட்டும். உலகத்தில் அவதரித்த சஜ்ஜனங்களாலும் பெரியோர்களாலும் தபோ பலத்தாலும் சதா தெய்வ சிந்தனையாலும், எல்லா சிரமங்களும் மாறி உலகம் பூராவாகவும் சுபிக்ஷம் அடையும், கடவுள் காப்பார்.